
Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 27 இதழ் - 3 மார்ச் 2014

தனிப்பிரதி
ரூ.10/-



வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது.
ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது.
(சங்கீதம் 19:1)

ஜெபியுங்கள் !

# பதினேழாம்

பங்குபெறுங்கள் !

# வேனிற்கால வேதாகம முகாம்




### ஆசானின் அறிவுரையிலே....

1. நிறுவன ஆசிரியர் உரை............................1

2. ஏன் நாங்கள் வேதாகமத்தை .... 9

3. பெண்கள் பகுதி........................................14

4. வாலிபர் பகுதி.........................................17

5. சிறுவர் பகுதி...........................................20

6. நிழலும் நிஜமும் ..................22

7. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை...........26

8. பொருத்தமான சுவிசேஷம்.......................29

9. தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு.........31

### ஊழியர் தேவை

புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் சிறப்பாகப் போதிக்கப்பட்டு, கால் நூற்றாண்டுக்கும் மேலாக தேவனை ஆவியோடும், உண்மையோடும் ஆராதித்து வரும் "கிறிஸ்துவின் சபைக்கு" முழு நேரமாக இறைபணி செய்ய நற்சாட்சி பெற்ற, ஆத்தும பாரம் கொண்ட ஊழியர் தேவை.

குடும்ப தேவைகள் தேவ தயவால் சந்திக்கப்படும்.

– ஆசிரியர்

தொடர்புக்கு :

**98427 30382, 98422 49427**

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 27 MARCH - 2014 Issue - 3

ஆசிரியர் உரை

# ஆதரித்து நடத்தினார்

ஆதரவு என்பது ஓர் ஆதரவற்ற வார்த்தை அல்ல. ஆதரவு என்பதன் பொருள், தனக்குத்தானே ஒருவன் அல்லது ஒன்று போதுமானதாக இல்லாதபோது பிறரிடமிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ எதிர்பார்க்கப் படும் ஒன்று. ஏதாவது ஒரு கட்டத்தில், சற்றும் எதிர்பாராத நேரத்தில் பிறருடைய ஆதரவை நாட வேண்டிய அவசியம் எல்லோருக்கும் வந்து சேரும். சில நேரங் களில், உன் ஆதரவு எனக்குத் தேவையில்லை, உங்கள் ஆதரவு எங்க ளுக்கு அவசியமில்லை என்று வாய் நீளத்தோடு வீறாப்பு பேசுகிறவர்கள் கூட, " எனக்கு நாலுபேர் இல்லாமலா போய் விடுவார்கள் " என்று சொல்லி முடிப்பர். இதன் மூலம், பிறர் ஆதரவு இல்லாமல் தங்களால் இயங்கிவிட முடியாது என்பதைத் தங்களையுமறியாமல் ஒத்துக்கொள்வர்.

யாருடைய ஆதரவும் இல்லாமல் யாராலும் இருந்து விட முடியாது என்பது யதார்த்த நிலையாக இருந்தாலும், அந்த ஆதரவுக்காக யாரை நாம் நம்புகிறோம், எங்கிருந்து எதிர்பார்க்கிறோம் என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாக உள்ளது. எப்படியெனில், ஆதரவு கொடுக்கிறவன் அதற்கான தகுதி உடையவராக, வலிமை உடையவராக, அப்படிக் கொடுப்பதில் உண்மையுள்ளவராக இல்லாதபட்சத்தில் ஆதரவு கேட்பவர் ஆபத்தில் சிக்கிக் கொள்ள வேண்டி வரும்.

இப்படியாக நாம் பேசும்போது ஒரு கேள்வி நமக்குள் எழுகிறது. அப்படியானால், இப்பூமியின் வாழ்க்கையில் நமக்குத் தேவையான ஆதரவுக்காக யாரை நாடுவது என்று. இக்கேள்விக்கான பதிலை

நமக்கெல்லாம் அதிர்ச்சி தரத்தக்க அளவில் மேசியா தீர்க்கனாகிய ஏசாயா எங்ஙனம் கொடுக்கிறார் என்று பாருங்கள். " நாசியிலே சுவாசமுள்ள மனிதனை நம்புவதை விட்டுவிடுங்கள்; எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம் " என்று (ஏசா. 2:22). இதன் பொருள் எந்த ஒரு மனிதனையும் எதற்காகவும் நம்பக்கூடாது என்பதல்ல. மாறாக, எல்லாவற்றுக்கும் " மனிதனே போதும் " என்று முடிவு கட்டிவிட வேண்டாம் என்பது தான். ஏனெனில், தன் நடை களை நடத்துவதற்கும், தன் வழியில் வெற்றியாய் செயல்படுவதற்கும் மனிதன் போதுமானவனல்ல என்று எரேமியா தீர்க்கனும் கூறியுள்ளார். (எரேமியா 10:23). ஆக, இந்த உண்மைகளினடிப்படையில் ஒருவன் செய்ய வேண்டு வதென்ன? எல்லாம் அறிந்த (1 யோவான் 3:20). சகல ஞானமும், பெலனும் கொண்ட (யோபு 12:16). சர்வ வல்லமையுள்ள (எரேமியா 32:17). தேவாதி தேவனிடத்தில் சரணாகதி அடைந்து விடுவதுதான். வேறென்ன?

நமது தலைப்புக்கான வசனம், " இப்படிக் கர்த்தர் எசேக்கியாவையும், எருசலேமின் குடிகளையும் அசீரியருடைய ராஜாவாகிய சனகெரிபின் கைக்கும் மற்ற எல்லாருடைய கைக்கும் நீங்கலாக்கி இரட்சித்து, அவர்களைச் சுற்றுப்புறத்தாருக்கு விலக்கி ஆதரித்து நடத்தினார் " என்பது (II நாளா. 32:22). இப்பொழுது, நமது வழக்கத்தின்படியாக இதன் பின்னணியைப் பார்த்து விடுவோம்.

வேதாகமத்திலுள்ள 66 நூல்களுள் நாளாகமப் புத்தகங்கள் இரண்டும் சற்று வித்தியாசமானவை. எப்படியெனில், இந்த இரண்டு புத்தகங் களிலும் ஏற்கனவே சாமுவேல் மற்றும் இராஜாக்களின் நூல்களில் சொல்லப் பட்டவைகளே திரும்ப இடம் பெற்றிருப்பதால் இந்த நாளாகம நூல்கள் அவசியம் தானா என்று கூட எண்ணத் தோன்றும். ஆனால், அப்படி நினைக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, இஸ்ரவேலின் வரலாறு பற்றி ஏற்கனவே கூறப்பட்டவைகளின் விளக்கவுரையாகவே இதைப் பார்க்க வேண்டும்.

நம்முடைய தலைப்புக்கான வசனம் II நாளாகம நூலில் உள்ளது. இந்நூல் I, II ராஜாக்கள் நூல்களின் சுருக்கமாகவும், விளக்கமாகவும் இருந் தாலும், விக்கிரக ஆராதனையில் மூழ்கி வீணாகிப் போன வடக்கு ராஜ்யம் பற்றி எதுவும் ஆசிரியரால் பேசப்படாமல், தேவாலயம் கட்டுவதற்குத் திரும்பி வந்த தெற்கு ராஜ்ஜியத்தின் மக்களை ஆவிக்குரிய காரியங்களில் உற்சாகப் படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுத்தே எழுதப்பட்டுள்ளது. இதினிமித்தம் தான் எருசலேமின் மகிமைக்கும், எருசலேமைத் தலைமையிடமாகக் கொண்டு அரசாட்சி செய்த உத்தம ராஜாக்களின் பக்தி செயல்பாடுகளுக்கும், ஆவிக்குரிய சீர்திருத்தங்களுக்கும் முக்கியத்துவமும், அழுத்தமும் கொடுக்கப் பட்டுள்ளது.

எருசலேமை ஆண்ட நல்ல ராஜாக்களில் ஒருவன் தான் எசேக்கியா. இந்த எசேக்கியாவின் நாட்களில் தேவாலயத்து வாசல்கள் திறக்கப்பட்டு, சுத்தி கரிக்கப்பட்டு, பலிகளுடன் கூடிய ஆராதனை முறை மீண்டும் ஆரம்பிக்கப் பட்டது. பஸ்கா பண்டிகையும் கொண்டாடப்பட்டது. (2 நாளா. 30 அதிகாரம்) பக்தி காரியங்களில் மக்களின் உற்சாகம் கரைபுரண்டு ஓடியது. கர்த்தருக்காகக்

குவியல் குவியலாகக் கொண்டு வந்து கொடுத்தார்கள் (2 நாளா. 31:5,6). இப்படிக் கர்த்தர் எசேக்கியா ராஜாவோடு கூட இருந்தார் என்பதைத் தேறின வேதபாரகனாகிய எஸ்றா எப்படி எழுதியிருக்கிறார் பாருங்கள். " இந்தப் பிரகாரமாக எசேக்கியா யூதாவெங்கும் நடப்பித்து, தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நன்மையும், செம்மையும் உண்மையுமானதைச் செய்தான். அவன் தேவனுடைய ஆலயத்தின் வேலையிலும், தன் தேவனைத் தேடும்படிக்கு நியாயப்பிரமாணத்திற்கும் கற்பனைக்கும் அடுத்த காரியத்திலும் என்ன செய்யத் தொடங்கினானோ, அதையெல்லாம் தன் முழு இருதயத்தோடும் செய்து சித்தி பெற்றான் " (2 நாளா. 31: 20,21).

இப்படி வெற்றி பெறுவது பொறுக்குமா சாத்தானுக்கு? தன் கண் எதிரே விக்கிரகாராதனைக் கோட்டை இடிந்து, சரிந்து, தரைமட்டமாகிப் போவதை எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? சாத்தானின் தளபதிகளில் ஒருவனாகத் திகழ்ந்த அசீரியா ராஜாவாகிய சனகெரிப் யூதாவின் பட்டணங்களுக்கு எதிராகப் பாளயமிறங்கினான். (2 நாளா. 32:1) அந்நாட்களில் நினிவேயைத் தலைநகரமாகக் கொண்ட அசீரியா ஏறக்குறைய ஒரு சாம்ராஜ்ஜியம். அசீரியாவின் ராணுவம் பெரிய எதிர்ப்பின்றி அன்றைய உலகை அச்சுறுத்தி வந்தது. இங்கே, யூதாவுக்கு எதிராக சுமார் இரண்டு லட்சம் படை வீரர்களுடன் பாளயமிறங்கியிருந்தனர். யுத்தமெல்லாம் தேவையில்லை, வெறும் மிரட்டலே போதும் என்பது அவர்களுடைய திட்டம்.

பொதுவாக பலம் வாய்ந்த ஒருவன் நமக்கு எதிரே நிற்கும் போது பயந்து, பலவீனப்பட்டுப் போவது தான் நடைமுறை. எல்லா நிலைகளிலும் இது தான் உண்மை. இஸ்ரவேலுக்கு எதிராக கோலியாத் என்னும் பெலிஸ்தன் கொக்கரித்த போது சவுலும், இஸ்ரவேலர்களும் அப்படித்தான் பயந்தார்கள். (1 சாமு. 17:24). ஆனால், " எசேக்கியா ராஜா தன் பிரபுக்களோடும், தன் பராமக்கிரமசாலிகளோடும் ஆலோசனை பண்ணி, அசீரியா ராஜாக்கள் வந்து, அதிக தண்ணீரைக் கண்டுபிடிப்பானேன் என்று சொல்லி, எல்லா ஊற்றுக்களையும், நாட்டின் நடுவில் பாயும் ஓடையையும் தூர்த்துப் போட்டதோடு (32:4) திடன் கொண்டு, இழந்துபோன மதிலையெல்லாம் கட்டி, அவைகளையும் வெளியிலுள்ள மற்ற மதிலையும் கொத்தளங்கள் மட்டும் உயர்த்தி, தாவீது நகரத்தின் கோட்டையைப் பலப்படுத்தி, திரளான ஆயுதங்களையும், கேடயங்களையும் பண்ணி, ஜனத்தின் மேல் படைத்தலைவரை வைத்து, அவர்களை நகரவாசலின் வீதியிலே தன்னண்டையில் கூடிவரச் செய்து, அவர்களை நோக்கி; நீங்கள் திடன் கொண்டு தைரியமாயிருங்கள்; அசீரியா ராஜாவுக்கும் அவனோடிருக்கிற ஏராளமான கூட்டத்திற்கும் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்; அவனோடிருககிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம். அவனோடிருக்கிறது மாம்ச புயம், நமக்குத் துணை நின்று நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர் என்று சொல்லி அவர்களைத் தேற்றினான்" (2 நாளா. 32:5,8).

இச்செய்தி அறிந்த சனகெரிப் கணக்கு தப்பாகி விட்டதென்பதை ஒப்புக் கொண்டு திரும்பிப் போக மனமில்லாமல், குறுக்கு வழியில் இறங்கினான்.

ஆம், எருசலேமின் குடிகளுக்கு தன்னுடைய ஆட்களை அனுப்பி அவர்கள் இருதயம் கரைந்து போகும்படியான வார்த்தைகளைப் பேச வைக்கிறான். " அசீரியா ராஜாவாகிய சனகெரிப் சொல்லுகிறது என்னவென்றால், முற்றுகை போடப்பட்ட எருசலேமிலே நீங்கள் இருக்கும்படிக்கு, நீங்கள் எதின்மேல் நம்பிக்கையாயிருக்கிறீர்கள்? நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மை அசீரியருடைய ராஜாவின் கைக்குத் தப்புவிப்பார் என்று சொல்லி, நீங்கள் பசியினாலும், தாகத்தினாலும் சாகும்படி உங்களைப் போதிக்கிறான் அல்லவா? " என்று சொல்லச் சொன்னான் (2 நாளா. 32:10,11). இத்தோடு நிறுத்தாமல், ".....எந்த ஜாதியின் தேவனும், எந்த ராஜ்யத்தின் தேவனும் தன் ஜனத்தை என் கைக்கும் என் பிதாக்களின் கைக்கும் தப்புவிக்கக் கூடா திருந்ததே; உங்கள் தேவன் உங்களை என் கைக்குத தப்புவிப்பது எப்படி என்று சொல்லி, அவருடைய ஊழியக்காரர் தேவனாகிய கர்த்தருக்கு விரோத மாகவும், அவருடைய தாசனாகிய எசேக்கியாவுக்கு விரோதமாகவும் பின்னும் அதிகமாய் பேசி, பூச்சக்கரத்து ஜனங்களால் தொழுது கொள்ளப்பட்டதுமாயி ருக்கிற தேவர்களை குறித்துப் பேசுகிற பிரகாரமாக எருசலேமின் தேவனை யும் குறித்துப் பேசினார்கள் ". (2 நாளா. 32:15,17).

தேசத்து ஜனங்களுக்கு விரோதமாகச் செய்தவைகளையும், தனக்கு எதிராகப் பேசியவைகளையும் பொறுத்துக் கொண்ட எசேக்கியாவால், பரலோகத்தின் தேவனை நிந்தித்துப் பேசின வார்த்தைகளைப் பொறுக்க முடியவில்லை. ஆம், கோலியாத் கொக்கரித்த போது, " ஜீவனுள்ள தேவனு டைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்தப் பெலிஸ்தன் எம்மாத்திரம் " என்று தாவீது கொதித்தெழுந்தான் அல்லவா, அதுபோல் எசேக்கியா துடித்துப் போனான். சவாலான சூழ்நிலையில் தான் செய்ய வேண்டியது இது தான் என கனகச்சிதமாகக் கணித்து, தீர்க்கனாகிய ஏசாயாவைக் கூட்டுக்குச் சேர்த்துக் கொண்டு வானத்தை நோக்கி அபய மிட்டான் (32:20). அங்கே, அவருடைய பிள்ளைகளின் கூக்குரலுக்குச் செவி கொடுக்கும் தேவன் ஒரு தூதனை அனுப்பி, அசீரியருடைய ராஜாவின் பாளையத்திலுள்ள சகல பராக்கிரமசாலிகளையும், தலைவரையும், சேனாதிபதிகளையும், அதம் பண்ணினார். அப்படியே சனகெரிப் செத்த முகமாய்த் தன் தேசத்திற்குத் திரும்பினான். அங்கே அவன் தன் தேவனு டைய கோவிலுக்குள் பிரவேசிக்கிற போது, அவனுடைய கர்ப்பப் பிறப்பான சிலர் அவனைப் பட்டயத்தால் வெட்டிப் போட்டார்கள் (32:21). தேவன் இப்படியாக எருசலேமின் குடிகளை சனகெரிப் கைக்கு இரட்சித்து, அவர்களைச் சுற்றுப் புறத்தாருக்கு விலக்கி ஆதரித்து நடத்தினார் (2 நாளா. 32:22).

சரி, எருசலேமின் குடிகளைத் தேவன் இரட்சித்து ஆதரித்து நடத்தின சம்பவம் நமக்குக் கற்றுக்கொடுக்கும் பாடங்கள் என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

## I எசேக்கியா ஆலோசனை செய்ததோடு, ஆயத்தமும் செய்தான் (32:5,6)

எருசலேமின் குடிகளைத் தேவன் சனகெரிப்பின் கைக்கு இரட்சித்து, ஆதரித்து நடத்தின சம்பவம் நமக்குக் கற்றுக் கொடுக்கும் முதல் பாடம்,

ஒருவன் தேவனால் ஆதரிக்கப்பட ஆலோசனையும், ஆயத்தமும் தேவை என்பது.

ஆலோசனை என்று சொல்லும் போது நமக்கு முதலில் நினைவுக்கு வரவேண்டியது பிதாவாகிய தேவனும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் தான். " அவருக்குத்தான் ஆலோசனையும், புத்தியும் உண்டு " என்று பக்தன் யோபுவும் (யோபு 12:13), குமாரன் இயேசு " ஆலோசனைக் கர்த்தர் " என்று ஏசாயாவும் கூறியுள்ளனர். இதை மீறின ஆலோசனை எதுவுமில்லை. இது ஒரு புறமிருந்தாலும், மனிதர்களாகிய நம்முடைய மேம்பட்ட செயல்பாட்டுக்கு ஆலோசனை அவசியமானதாகவே உள்ளது. இது குறித்து ஞானி சாலமோன் இவ்விதம் கூறுகிறார். " ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்து போவார்கள்; அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும் " என்று (நீதி. 11:14).

இந்த உண்மையைத் தான் ஆபத்து சூழ்ந்திருந்த அவ்வேளையில் எசேக்கியா ராஜா பின்பற்றினான். ஆம், " நகரத்திற்குப் புறம்பேயிருக்கிற ஊற்றுகளைத் தூர்த்துப்போட தன் பிரபுக்களோடும், தன் பராக்கிரமசாலி களோடும் ஆலோசனை பண்ணினான் " (32:3). அந்நாட்களில் இப்படி ஆலோசனை செய்வது ராஜதர்மம் அல்ல. ராஜா ஆணையிட மற்றவர்கள் நிறைவேற்ற வேண்டும் அவ்வளவுதான். ஆனாலும், எசேக்கியா " தான் ராஜா" என்று எண்ணாமல் " இறங்கி " செயல்பட்டான். " இது, ராஜலட்சணம் அல்ல". ஆனால், இது " தேவ மனிதனுக்கான இலட்சணம் ". தேவ லட்சணத்திற்காக ராஜலட்சணத்தைத் துறந்தான். ஆலோசனையின் விளைவாக, எதிரிகளுக் குத் தண்ணீர் கிடைக்காதபடி செய்து, எருசலேமின் குடிகளுக்கான தண்ணீர் உறுதியும் செய்யப்பட்டது. (32:20) எசேக்கியா செய்ததெல்லாம் வாய்த்தது.

அருமையானவர்களே, இன்றைக்கு எத்தனை பேர் தங்கள் நிலையி லிருந்து இறங்கி பிறரோடு சேர்ந்து ஆலோசனை செய்து செயல்படத் தயாரா யிருக்கிறோம்? சொல்லுங்கள். குறிப்பாக, ஆவிக்குரிய காரியங்களில் வழி நடத்தும் பொறுப்பிலுள்ள எத்தனைபேர் இதற்குத் தயார்? சரியான ஆலோசனை இல்லாத காரணத்தால் விழுந்துபோகும் கிறிஸ்தவ குடும்பங்கள், கிறிஸ்தவ சபைகள், கிறிஸ்தவ அமைப்புகள் எத்தனை எத்தனை என்று உங்க ளுக்குத் தெரியுமா? இங்கே ஒரு ராஜா தன் நிலையிலிருந்து இறங்கி செயல் பட்டதைக் கவனித்தீர்களா? கர்த்தர் ஏன் அவன் காரியங்களை வாய்க்கச் செய்து, அவன் தேசத்தை இரட்சித்து ஆதரித்தார் என்பதைப் புரிந்து கொண்டீர்களா? அப்படியானால் இந்த எளிய உண்மை கிறிஸ்தவத்திலே பொறுப்பிலுள்ளவர்களுக்கு ஏன் இன்னும் புரியாமலிருக்கிறது?. நான் ஆயர், நான் பேராயர், நான் பாஸ்டர், நான் தலைமைப் பாஸ்டர், ஆகவே, நான் சொல்வதைத்தான் நீங்கள் எல்லோரும் கேட்க வேண்டுமென்று எப்படிச் சொல்லுகிறார்கள்? புரியவில்லை என்கிறீர்களா? புரிந்து கொள்ள முயற்சித்தால் கண்டிப்பாகப் புரியும். பல நேரங்களில் புரிந்து கொள்ள நாம் மறுக்கிறோம்.

எப்படியெனில், வேதாகமத்தைப் படிக்கும் போது, இந்தப் பட்டங்களெல்லாம் தேவனால் கொடுக்கப்பட்டவை அல்ல என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். அப்படியிருக்கும் போது, தேவ வசனத்தின்படியல்லாத பதவியை அபகரித்தவர்களிடம், வேத வசனங்களினடிப்படையிலான செயல்பாட்டை எப்படி எதிர்பார்க்க முடியும்? மாறாக, நாட்டுச் சட்டத்தின்படி காவல் நிலையங்களுக்கும், நீதிமன்றங்களுக்கும் அலைந்து திரிந்து கொண்டிருக்க வேண்டியது தான். சபையின் காரியங்கள் கவனிக்கப்பட தேவன் தனது ஞானத்தின்படியாக ஒன்றுக்கும் மேற்பட்ட மூப்பர்களையும், உதவிக்காரர்களையும், போதனையில் உதவும்படி பிரசங்கிகளையும் வைத்திருக்கிறாரேயொழிய தனி ஒருவனாகத் தன்னிச்சையாகச் செயல்படும் பேராயர்களையும், பாஸ்டர்களையும் வைக்கவில்லை (1 தீமோ. 3; தீத்து 1) தெளிவடைவோம்.

அங்கே எசேக்கியா ஆலோசனை செய்ததோடு ஆயத்தமும் செய்துள்ளார். கோட்டையைப் பலப்படுத்தி, திரளான ஆயுதங்களையும் கேடகங்களையும் பண்ணினான். தேவன் தமது காரியமாகச் செயல்படுவதற்கு நம்முடைய பங்காக நாம் செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டுமென்று எப்பொழுதும் எதிர்பார்க் கிறார். எசேக்கியா ராஜா இவ்வுண்மையைப் புரிந்து செயல்பட்டார். ஆகவே, அவன் செய்ததெல்லாம் வாய்த்தது. கர்த்தர் ஆதரித்து நடத்தினார். ஆகவே, நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் தேவன் ஆதரித்து வழிநடத்த நம்மோடிருப்பவர்களோடு ஆலோசனை செய்கிறவர்களாகவும், தேவ சித்தத்தைப் புரிந்து நம்மை எல்லாவகையிலும் ஆயத்தப்படுத்துகிறவர்களுமாயிருப்போம்.

**II எசேக்கியா கர்த்தர் மீது நம்பிக்கை வைத்து செயல்பட்டான் (32:6,8)**

எருசலேமின் குடிகளைத் தேவன் சனகெரிப்பின் கைக்கு இரட்சித்து, ஆதரித்து நடத்தின சம்பவம் நமக்குக் கற்றுக் கொடுக்கும் அடுத்த பாடம். ஒருவன் தேவனால் ஆதரிக்கப்பட தேவன் மீது நம்பிக்கை வைத்துச் செயல்பட வேண்டும் என்பது.

தன் பங்குக்கு ஆலோசனையும், ஆயத்தமும் செய்த எசேக்கியா ராஜா, வெற்றிக்கு அதுவே போதும் என்று மமதை கொள்ளாமல், கர்த்தர் தான் எல்லாம் என்று உணர்ந்து, அவரை நம்பிச் செயல்பட்டான். " குதிரை யுத்த நாளுக்கு ஆயத்த மாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும் " (நீதி. 21:31) என்னும் உண்மை இவனுக்குப் புரிந்திருந்தது. ஆகவே, தனக்குள்ளாக இருந்த அந்த நம்பிக்கை தன்னோடிருப்பவர்களுக்கு வரும்படியான காரியங்களில் தன்னை ஈடுபடுத்தினான். " சனகெரிப்போடு இருப்பது மாம்சபுயம், நமக்குத் துணை நின்று நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடி ருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர் " என்று சொல்லி ஜனங்களைத் தேற்றினான். எசேக்கியாவின் வார்த்தைகளில் ஜனங்கள் நம்பிக்கை வைத்தார்கள். ஜனங்கள் சோர்ந்து போயிருந்த வேளையில் அவர்களைத் தேற்றியுள்ளார். தேவனும், இயேசு ஆண்டவரும் இப்படித்தான் செயல்பட்டார்கள். மோசேயின் மரணத்துக்குப் பிறகு காரியங்கள் எப்படியாகுமோ என்ற ஒரு நிலை இருந்தபோது, " திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன்

தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் " என்று கூறியுள்ளார் (யோசுவா. 1:9). இயேசு ஆண்டவரும் தன் சீடர்களிடம், " உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக " என்றே கூறியுள்ளார் (யோவான் 14:1).

அருமையானவர்களே, சோர்ந்து போகும்படியான சமயங்கள் நம் எல்லோருடைய வாழ்க்கையிலும் வரும். குடும்ப வாழ்விலும் வரும், பக்திப் பயணங்களிலும் வரும். அதுவும் குறிப்பாக தேவனுக்காக வாழ்கின்ற வாழ்க்கையில் வெற்றியாய் நடக்க நம்மை ஒப்புக்கொடுக்கும்போது, பொறுக்க முடியாத பிசாசு அவன் வேலையை ஆரம்பிப்பான். எசேக்கியா ராஜா தேவனுக்காகக் காரியங்களை வைராக்கியத்தோடு செய்து, தேவக் காரியங்களில் சித்தி பெற்ற போது தான் சனகெரிப்பால் சவால் வந்தது. அப்பொழுது அவன் துவண்டு போகவில்லை. தேவனைச் சலித்துக் கொள்ள வில்லை. மாறாக, தன்னோடிருப்பவர்கள் தேவன் மீது தங்கள் நம்பிக்கை அனைத்தையும் வைக்கும்படியான வார்த்தைகளைப் பேசினான்.

ஆம், தேவை எதுவோ அதைச் செய்தான். நான் மதில்களை உயரமாக எழுப்பி விட்டேன். கோட்டையைப் பலப்படுத்தி விட்டேன். ஏராளமான ஆயுதங்களையும், கேடகங்களையும் உண்டு பண்ணியிருக்கிறேன் என்று கூறவில்லை. தேவன் தான் எல்லாம், அவரால் முடியும் என்பதை அவர்க ளுடைய கண்களுக்கு முன்பாகக் கொண்டு வந்து நிறுத்தினான். பல நேரங் களில் இந்த அணுகுமுறை குடும்ப வாழ்க்கையிலும், பக்தி வாழ்க்கையிலும் பின்பற்றப்படுவதில்லை. விளைவு, பயம், கலக்கம், தோல்வி. மாம்ச புயத்தை நம்பும்போது, தேவன் நீயே பார்த்துக் கொள் என்று ஒதுங்கிக் கொள்கிறார். ஆகையால், எசேக்கியா போல், நாமும் நம்முடைய குடும்பமும், நம்முடைய ஆவிக்குரிய குடும்பமும் தேவனால் ஆதரிக்கப்பட எச்சூழலிலம் தேவனையே நோக்கிப் பார்க்கிறவர்களாய் இருப்போம்.

## III எசேக்கியா தேவனை நோக்கி அபயமிட்டான் (32:20)

எருசலேமின் குடிகளைத் தேவன் சனகெரிப்பின் கைக்கு இரட்சித்து ஆதரித்து நடத்தின சம்பவம் நமக்குக் கற்றுக் கொடுக்கும் இன்னொரு பாடம் ஒருவன் தேவனால் ஆதரிக்கப்பட தேவனை நோக்கி மன்றாட வேண்டு மென்பது.

தேசத்திற்கும், எருசலேமிற்கும், எருசலேமின் குடிகளுக்கும் ஆபத்து வந்த போது, தான் ஒரு ராஜாவாக ராணுவ ரீதியில் எவைகளையெல்லாம் செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் ஆயத்தமாக்கிவிட்டு, ஒட்டு மொத்த குடிகளை பக்தி ரீதியாக தேவனையே சார்ந்திருக்கும்படியான நம்பிக்கையூட்டும் வார்த்தைகளைப் பேசினான். இராஜாவின் வார்த்தை களில் எருசலேமின் குடிகள் நம்பிக்கை வைத்தார்கள். இப்பொழுது இராணுவமும் ரெடி, மக்களும் தயார். ஆகவே, யுத்தத்தை ஆரம்பிக்கலாம் என்று நினைக்கவில்லை. அங்கே காரியங்கள் எப்படிப் போகிறது என்பதைக் கவனிக்கவும், தேவன் எப்படி நடத்தப் போகிறார் என்பதைத் தெரிந்து கொள்ளவும் காலம் எடுத்துக்கொண்டான்.

இப்படிப்பட்ட பக்குவமான செயல்பாடு பெரும்பாலான நேரங்களில் நம்முடைய வாழ்க்கையில் இருப்பதில்லை. தேவனுக்காகக் காத்திருக்காமல்,


நம்முடைய தரப்பிலே எல்லாம் சரியாக இருக்கிறது. ஆகவே, " நடத்தலாம் " என்று எண்ணுவதை தேவன் ஏற்றுக்கொள்வதில்லை. " நீங்கள் அமர்ந் திருந்து, நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள் " (சங். 46:10) என்றே கூறுகிறார். இப்படிப்பட்ட தேர்ந்த செயல்பாடு இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுலுக்கு இல்லாதே போனபடியால் தான் தன் ராஜ்யபாரத்தேயே இழந்தான் (1 சாமு. 13:8,14) நம்முடைய பங்குக்கு நம்மிடத்தில் சில ஆயத்தங்கள் இருந் தாலும், தேவக் காரியங்களில் காத்திருந்து செயல்பட நாம் பழகி, அதற்காக நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும்.

தங்களுக்கு ஆபத்து வந்தபோது ஏற்றுக்கொண்டு பொறுமை காத்த ராஜாவால், தன் தேவனின் நாமத்திற்கு இழுக்கு என்று வந்தபோது அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. தீர்க்கனாகிய ஏசாயாவையும் சேர்த்துக் கொண்டு பிரார்த்தித்து வானத்தை நோக்கி அபயமிட்டார். அப்பொழுது தேவன் செயல்பட்டார். " நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள் ளதாயிருக்கிறது " (யாக். 5:16) என்பதன் பொருளை நாம் இங்கே காண முடிகிறது. அங்கே தேவன் " ஒரு தூதனை " அனுப்பி சனகெரிப்பின் பராக்கிரமசாலிகளை அதம்பண்ணி, சனகெரிப்பும் தன் கர்ப்பப் பிறப்புகளால் சாகும்படி செய்தார். தேவனுக்காகக் காத்திருந்து, தேவனிடத்தில் உத்தமனாக இருந்து ஜெபிப்பதால் கிடைக்கும் பலன் நமக்கு ஆச்சரியமாக இருக்கிற தல்லவா? யுத்தத்திற்காக அவன் ஆயத்தம் செய்த எதுவும் அங்கே அவசியப் படவில்லை. ஏனென்றால், அவர் தேவன். அவ்வளவுதான்!.

அருமையானவர்களே! எசேக்கியா போல் தேவன் நம்மை நம்முடைய ஆபத்துக்களிலிருந்து விடுவித்து, ஆதரிக்க நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒன்றான மெய் தேவனின் நாமத்திற்கு இழுக்கு என்று வந்தபோது அவன் பதறினான். ஏனென்றால், தேவன் ஒருவர் தான் என்பதே (எபே. 4:6) அதுபோல, இயேசுவால் வாக்களித்து (மத். 16:18), அவருடைய இரத்தத்தால் வாங்கப்பட்ட (அப். 20:28) சபையும் ஒன்றே ஒன்றுதான்.

அப்படியானால், கிறிஸ்துவின் சரீரமாகிய இச்சபையைக் குறித்து நாம் ஏன் பெரிதாக எண்ணாமல் இருக்கிறோம்? சபை முக்கியமல்ல என்று ஒருவர் போதிக்கும்போது எப்படி மௌனம் காக்கிறோம்? பூச்சக்கரத்திலுள்ள எல்லா சபைப் பிரிவுகளைப் போலவே, கிறிஸ்துவால் இரத்தம் சிந்தி வாங்கப்பட்ட சபையும் ஒன்று தான் என்று பேசும் போது எப்படிச் சகித்துக்கொள்ளுகிறோம்? என்றைக்காவது தேவனிடத்தில் நாம் இதற்காக மன்றாடியிருக்கிறோமா? சிந்திப்போம். ஒன்றான மெய்ச்சபை பற்றிய அறிவும், தெளிவும் ஒவ்வொரு வருக்கும் அவசியம். நம் வாழ்க்கையில் நாம் தேவனுக்காக இப்படி செய்ய வேண்டியவைகளைச் செய்யாமல் தேவன் நம்மை நம் ஆபத்துக்களிலிருந்து விடுவித்து, ஆதரித்து நடத்த வேண்டுமென்று எதிர்பார்த்தால் அது நடக்காது. எசேக்கியா போல் " ஒன்று " என்கிற பக்தி நிலைகளில் நாம் தேவனுக்காக, அவருடைய காரியங்களுக்காக தைரியமாகச் செயல்பட வேண்டும்.

அப்படிச் செயல்படும்படியான விசுவாசத்தையும், மன உறுதியையும், பரலோகத்தின் தேவன் நமக்குத் தந்தருளுவாராக! ஆமென்!!



# ஏன் நாங்கள் வேதாகமத்தை விசுவாசிக்கிறோம்?

**Bro. J.C. சோட்**

வேதாகமம் மிகத் தொன்மையான ஒரு புத்தகம். இதை எழுதுவதற்கு நூற்றுக்கணக் கான வருடங்கள் பிடித்தது. இதன் ஆசிரியர்கள் பல்வேறு பட்ட பின்னணியைச் சேர்ந்தவர்கள். இருப்பினும், அவர்கள் எழுதினவைகளையெல்லாம் ஒன்று சேர்க்கும் போது, எவ்வித முரண்பாடும் இல்லாமல் ஒரே கருப் பொருளை உடைய ஒரு முழுமையான புத்தகமாக மாறிவிடுகிறது. இது சிருஷ்டிப்பின் தொடக்கத் தோடு ஆரம்பிக்கப்பட்டு, பூமியும் அதிலுள்ளவைகளும் அழிவதோடு முடிவடைகிறது. இப்புத்தகம் மனிதனைப் பற்றிச் சொல்லும் போது, மனிதனுடைய நல்ல குணம் பற்றியும், மோசமான குணம் பற்றியும், பேசி மனிதனுக்கு ஓர் இரட்சகர் அவசியம் என்று காட்டுகிறது. ஓர் ஒப்பற்ற புத்தகம் என்னும் பொருளை உடைய வேதாகமம் இரண்டு முக்கிய பிரிவு களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது; பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு என்று. பழைய ஏற்பாடு 39 புத்தகங்களை உள்ளடக்கியது, புதிய ஏற்பாடு 27 புத்தகங் களை உள்ளடக்கியது. எனவே, வேதாகமம் மொத்தமாக 66 புத்தகங் களைக் கொண்டது.

இன்னும், வேதாகமம் மூன்று முக்கிய காலங்களை உள்ளடக்கி யுள்ளது. முதலாவது, முற்பிதாக்களின் காலம். இது ஆதாமில் தொடங்கி மோசேயின் நாட்கள் வரை, அதாவது 2500 ஆண்டு காலம் நீடித்தது. இந்த காலத்தில் தேவன் பிதாக்களிடத்தில் பேசினார். அவர்கள் தங்கள் குடும்ப அங்கத்தினர்களுக்கு தேவனுடைய சித்தத்தைத் தெரிவித்தார்கள். இரண்டாவது, மோசேயின் காலம். இது மோசேயில் தொடங்கி கிறிஸ்துவின் காலம் வரை சுமார் 1500 ஆண்டுகளை உள்ளடக்கியது. இந்தக் கால கட்டத்தில் தேவன் மோசேயின் பிரமாணம் என்றழைக்கப்படுகிற எழுதப்பட்ட பிரமாணத்தின் மூலமாகப் பேசினார். மூன்றா வது, கிறிஸ்தவ காலம் அல்லது கிறிஸ்துவின் பிரமாணத்தின் காலம். இது கிறிஸ்துவின் மரணத்தோடு ஆரம்பித்து கிறிஸ்து திரும்ப வரும் வரை நீடிக்கும். இந்த காலத்தில் ஏற்கனவே 2000 வருடங்கள் உருண்டோடி விட்டன. இனிமேல் எத்தனை ஆண்டுகள் நீடிக்கும் என்பது தேவனைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. ஒருவர் இந்தக் காலங்களை இப்படியாக விவரித்திருக்கிறார்; முற்பிதாக்களின் காலத்தை நட்சத்திர ஒளியை உடைய காலம் என்றும், மோசேயின் காலத்தை நிலவொளி உடைய காலம் என்றும், கிறிஸ்தவ காலத்தை சூரிய ஒளி உடைய காலம் என்றும் வர்ணித்திருக்கிறார். இதன் கருத்து என்னவென்றால், ஒவ்வொரு காலத்திலும் ஒளி கூடிக் கொண்டே வருகிறது. சூரிய ஒளி காலம் என்பது முழுமையான வெளிச்சம் கொண்ட காலம் என்பதை அடையாளப் படுத்துகிறது.

வேதாகமத்தில் இரண்டு முக்கிய ஏற்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற படியால், இவ்விரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாட்டை நாம் புரிந்து கொள்வது அவசியமாயிருக்கிறது. முதலாவது, தேவன் தம்முடைய சித்தத்தை தம் ஜனங்களுக்கு வெளிப்படுத்தினார். இது, முற்பிதாக்களின் காலத்திலும், மோசேயின் பிரமாண காலம் முழுவதிலும் தொடர்ந்தது. அதன் பின்பு, தேவன் தம் ஜனங்களுக்கு ஒரு புதிய பிரமாணத்தை ஏற்படுத்தினார். இந்தப் பிரமாணம் இயேசு கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டு இந்நாள் வரை நம்மைத் தொடர்ந்து கட்டுப்படுத்துகிறது. தேவன் ஒரு புதிய சித்தத்தைக் கொடுக்கும் போது, அது முதல் ஏற்பாட்டை அல்லது முந்தின சித்தத்தை பழையதாக்குகிறது. ஆகவே, அந்த முதல் ஏற்பாடு ஒரு சட்டமாக நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை. ஆனால், இன்றும் அது வரலாறாக இருந்து, தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களை அவர் எப்படி ஆசீர்வதித்தார் என்றும், கீழ்ப்படியாதவர்களை அவர் எப்படித் தண்டித்தார் என்றும் அநேக உதாரணங்களைத் தருகிறது. அத்தோடு அது வாழ்க்கைக்கான அநேக நடைமுறைக் கொள்கைகளை உள்ளடக்கி, அதன் மூலம் நாம் எல்லோருமே எப்படிப் பயன் பெறலாம் என்று காட்டுகிறது. அதே வேளையில், ஒரு பிரமாண மாக இருந்து இன்று அது நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை. புதிய ஏற்பாட்டில் நாம் காணும் பிரமாணம் தான் இன்று நம்மைக் கட்டுப்படுத்துகிறது.

கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது, புதிதாய் ஒரு பிரமாணத்தைத் தரும்படி பழைய பிரமாணத்தை எடுத்துப் போட்டார். எபிரெய ஆசிரியரின் வார்த்தைகளை தயவு செய்து இங்கே கேளுங்கள். ஏனென்றால், “*எங்கே மரணசாசனமுண்டோ, அங்கே அந்தச் சாசனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே* ” (எபிரெயர் 9:16,17). எபிரெய ஆசிரியர் தொடர்ந்து சொல்லும் போது, தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன் என்று சொன்னார். “*இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார். இயேசு கிறிஸ்து வினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறோம்* ” (எபிரெயர் 10:9,10).

முன்பு குறிப்பிடப்பட்டிருக்கிற காரியங்களை வைத்துப் பார்க்கும் போது, வேதாகமம் ஏன் மற்றுமொரு வரலாற்று புத்தகமாக இருக்கக் கூடாது?

உண்மை தான், இது வரலாற்று புத்தகம் தான். அத்தோடு, வேதாகமம் ஒரு புவியியல் புத்தகம், இது ஒரு அறிவியல் புத்தகம். இது ஒரு சிறந்த இலக்கிய புத்தகம். ஆனால், வேதாகமம் இப்படிப்பட்ட புத்தகங்களை யெல்லாம் விட மேலானது. *வேதாகமம், தேவனுடைய வார்த்தைகளைக் கொண்டுள்ள தேவனால் ஏவப்பட்ட ஒன்று என்று விசுவாசிக்கிறோம். இது கர்த்தருடைய வார்த்தைகளைக் கொண்டது என்று கூறுகிறது* (எபி. 4:2) இது பற்றி பவுல் இப்படியாகச் சொன்னார். *வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது;* தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த *நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் நீதியைப்*

*படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது* (II தீமோ. 3:16, 17) பேதுரு அப்போஸ்தலனும், *வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுய தோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்* (II பேதுரு 1:20,21) என்று வெளிப்படுத்தியுள்ளார்.

வேதாகமம் தேவனுடைய வார்த்தை அல்லது கர்த்தருடைய வார்த்தை என்றழைக்கப்படுவதால் நாங்கள் அதை விசுவாசிக்கிறோம். கிறிஸ்து பிதாவை நோக்கி ஜெபித்தபோது, " *உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்* " *என்றார்* (யோவான் 17:17). பவுலடியார் ரோமாபுரியாருக்கு இப்படியாக எழுதினார். "*கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக. சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன்பாடி* " என்று (கொலோ 3:16). மேலும், பவுல், " *ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்* " (ரோமர் 10: 17) என்கிறார். இன்னும் பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லும் போது, "*சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும், கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு* " என்கிறார் (II தீமோ. 4:2). மேலும், *யாக்கோபு ஆசிரியர் சொல்லும் போது,* "*அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களையும் இருங்கள்* " (யாக்கோபு 1:22). பரிசுத்த வேதாகமம், தேவனுடைய வார்த்தை, கர்த்தருடைய வார்த்தை, வேத வாக்கியங்கள், தேவனுடைய கட்டளைகள், சத்தியம் என்றும் அழைக்கப்படுகிறது. அது அப்படித்தானென்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

நாங்கள் வேதாகமத்தை விசுவாசிக்கிறோம். ஏனெனில், தொல்பொருள் ஆராய்ச்சி, வரலாறு, புவியியல், அறிவியல் போன்ற துறை களின் இன்றைய தரத் தோடு வேதாகமம் வெளிப்படுத்தியிருக்கின்ற உண்மைகள் அப்படியே ஒத்துப் போகிறது. உதாரணத்திற்கு, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் மகத்தான கண்டுபிடிப்புகளுக்கு பல நூறு ஆண்டுகள் முன்பாகவே, வேதாகமம் இந்தக் காரியங்களனைத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறது. சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய கண்டுபிடிப்புகளில் ஒன்று சவக்கடல் தோல் சுருள். அவர்கள் அப்படிக் கண்டுபிடிப்பதற்கு முன்பாகவே பழைய ஏற்பாட்டு எழுத்துக்கள் கி.பி. 900 முதல் 1000-ம் ஆண்டுகளைச் சேர்ந்த தோல் சுருள்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. எஸ்தர் புத்தகம் தவிர, பழைய ஏற்பாட்டு புத்தகங்களை உள்ளடக்கிய சவக்கடல், தோல் சுருள், கி.மு. 200 மற்றும் கி.பி. 68 காலத்தைச் சேர்ந்தவை. இந்த எழுத்துக்கள், பழைய ஏற்பாட்டு வசனங்களெல்லாம்

உண்மை தான் என்பதை உறுதிப்படுத்த உதவி செய்கிறது. வரலாற்றைப் பொறுத்த வரை, வேதாகமமும், உலக வரலாறும் ஒன்றுக்கொன்று ஒத்துப் போகிறது. புவியியலில் இன்று நமக்கு பரிச்சயமான பட்டணங்கள், மலைகள், கடல்கள் எல்லாம் வேதாகமத்தின் மூலமாக நாம் அறிந்து கொள் கிறோம். சிலர், வேதாகமும், விஞ்ஞானமும் ஒத்துப்போவதில்லை என்று நினைத்தார்கள். ஆனால், இது உண்மையல்ல. விஞ்ஞானம் என்ற வார்த்தை, உண்மை என்கிற கருத்தை அடிப்படையாகக் கொண்டது. நிச்சயமாகவே, வேதாகமம் உண்மையோடு முரண்படுவதில்லை. வேத வாக்கியங்களும், தவறான அறிவியலும் அல்லது மனிதர்களுடைய கொள்கைகளும் ஒன்றுக் கொன்று முரண்படும். வேதாகமம், விஞ்ஞானமும் ஒத்துப்போகிறது என்பதற்கு ஓர் அருமையான உதாரணம் பூமி உருண்டை என்பது தான் (ஏசாயா 40:22; யோபு 26:7). இது தவிர, உங்களுக்குக் கொடுப்பதற்கு எங்களிடம் ஏராளமான உதாரணங்கள் உண்டு. ஆனால், நேரம் தான் இல்லை.

வேதாகமம் தேவனுடைய வார்த்தை என நாங்கள் விசுவாசிப்பதற்குக் காரணம், இதில் இடம்பெற்றுள்ள தீர்க்கதரிசனங்களெல்லாம் தவறாமல் அப்படியே நிறைவேறியிருப்பது தான். அதில் ஒன்று, இயேசு கிறிஸ்து ஒரு கன்னியினிடத்தில் பிறப்பார் என்பதாகும் (ஏசாயா 7:14). மத்தேயு 1 ஆம் அதிகாரத்தில், கன்னியாகிய மரியாளிடத்தில் கிறிஸ்து பிறந்ததின் மூலம் இந்த தீர்க்கதரிசனம் அப்படியே நிறைவேறியது. யோவேல் 2:28, 29 வசனங் களில், மாம்சமான யாவர் மேலும் கர்த்தரு டைய ஆவி ஊற்றப்படும் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. இது, அப்போஸ்தலருடைய நடபடிகள் 2 ஆம் அதிகாரத்தில் நிறைவேறியது. இவை தவிர அநேக தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டு, பின்பு நிறை வேறியதை நாம் காண முடியும்.

வாழ்க்கையின் மிகப்பெரிய கேள்விகளுக்கு வேதாகமம் பதில் அளிப்பதால் நாங்கள் அதை விசுவாசிக்கிறோம். வேதாகமம் மனிதன் எங்கே இருந்து வந்தான் என்றும், அவன் ஏன் இங்கே இருக்கிறான் என்றும், அவன் எங்கே போகிறான் என்றும் நமக்குச் சொல்கிறது. அதுமாத்திரமல்ல, இரட்சிக் கப்பட நான் என்ன செய்ய வேண்டும்? என்கின்ற கேள்விக்கு வேதாகமம் பதில் அளிக்கிறது (அப் 2:37,38; அப். 16:30-33).

வேதாகமம், மனிதனின் ஒட்டுமொத்த நன்மைக்காக அவன் மீது ஒரு மகத்தான செல்வாக்கை செலுத்துவதால் நாங்கள் அதை விசுவாசிக்கிறோம். வேதாகமம் பாவத்தைக் கண்டித்து, நீதியான வாழ்க்கையை ஊக்கப்படுத்து கிறது. இதன் காரணமாக, உலகம் ஒரு சிறந்த இடமாக மாறியிருக்கிறது.

கர்த்தருடைய வார்த்தை ஒரு போதும் ஒழிந்து போவதில்லை என்பதால் நாங்கள் வேதாகமத்தை விசுவாசிக்கிறோம். கிறிஸ்து இப்படியாகச் சொன்னார். " *வானமும், பூமியும் ஒழிந்து போனாலும் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை* " (மத். 24:35). மேலும், கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் என்று பேதுரு சொல்கிறார் (பேதுரு 1:25). இன்னும், கடைசி நாளில் தான் சொல்லிய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும் என்று கிறிஸ்து சொன்னார் (யோவான் 12:48).

வேதாகமத்திற்கு அநேக எதிரிகள் இருந்தார்கள் என்பது உண்மை தான். அவர்கள் வந்தார்கள், போனார்கள். ஆனால், வேதாகமம் இன்றும் நிலைத்து நிற்கிறது. இந்தப் புத்தகத்தைப் பற்றி உங்கள் மதிப்பீடு என்ன? இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அநேகர் விசுவாசிக்கிறார்கள். உண்மையில், உலகிலேயே அதிகமாக மொழியாக்கம் செய்யப்படும் புத்தகம் வேதாகமம் தான். அதுமாத்திரமல்ல, உலகிலேயே அதிகமாக விற்பனை யாகும் புத்தகமும் இது தான்.

நீங்கள் ஒவ்வொருவரும் வேதாகமத்தை வாசிக்கும்படி நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படி கிறிஸ்து சொன்னார். (யோவான் 5:39) *நம்மை நாம் தேவனுக்கு முன்பாக உத்தமர்களாக நிறுத்தும்படி வேத வசனங்களைப் படிக்க வேண்டும் என பவுல் வலியுறுத்தினார்* (II தீமோ. 2:15). மறுபடியும், கிறிஸ்து மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று சொன்னார் (மத். 4:4). யோவான் இப்படியாக எழுதியுள்ளார். " *இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவர்களும், கேட்கிறவர்களும் இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக் கொள்கிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது* " என்று. (வெளி 1:3).

நீங்கள் தேவனுடைய வார்த்தையை வாசித்து, படித்து, அதை விசுவாசித்து தேவனில் நம்பிக்கை வைத்து, அதன் உபதேசத்துக்குக் கீழ்ப் படிந்து, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் நீங்கள் வைத்திருக்கிற விசுவாசத்தை அறிக்கை செய்து, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றால், அதாவது, தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டால் கர்த்தர் உங்களை இரட்சித்துத் தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார் (மாற்கு 16:16; அப் 2:38,47).

## கர்த்தர் என்....

| | | |
|---|---|---|
| போஷகர் | – | நான் திருப்தி அடைகிறேன் |
| ஆசிரியர் | – | நான் போதிக்கப்படுகிறேன் |
| கன்மலை | – | நான் பாதுகாப்பாக இருக்கிறேன் |
| மேய்ப்பர் | – | நான் பராமரிக்கப்படுகிறேன் |
| இரட்சகர் | – | நான் விடுவிக்கப்படுகிறேன் |
| இளைப்பாறுதல் | – | நான் ஆற்றப்படுகிறேன் |
| வழிகாட்டி | – | நான் நடத்தப்படுகிறேன் |

பெண்கள் பகுதி

# " காலம் "

Sis. RR NAYAGAM

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஸ்தோத்திரங்களை தெரிவித்துக் கொள்கிறேன். மனுக்குலத்துக்கு வேண்டிய அனைத்து ஆலோசனைகளையும் வெளிப்படுத்திக் கொடுத்த தேவன் காலத்தின் அவசியத்தையும், பயன்பாட்டையும் குறித்தும் சொல்லத் தவறவில்லை. " நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் " (எபேசி. 5:16) என்று அப்போஸ்தலனாகிய பவுலால் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளதை நாம் வாசிக்கி றோம்.

காலம் என்று சொல்லும் பொழுது அது எல்லோருக்கும் பொதுவானது. காலம் நமக்கு கொடுக்கப்பட்ட ஒன்று. நாம் அதை பயன்படுத்திக் கொண்டுள்ளோம். அது கடந்து விட்டால் அதை மீண்டும் திரும்ப பெற்றுக்கொள்ள இயலாது. உலகத்திலேயே வைத்து மிகவும் முக்கியமான ஒன்று எது என்று சொன்னால் அது காலம் தான். ஞானமாக பயன்படுத்தினால் அது ஆசீர்வாதமானதாக இருக்கும். சரியாக, முறையாக பயன்படுத்தாவிட்டால் அது வீணானதொன்றாகி விடும்.

காலம் என்றால் என்ன? பிறப்பு முதல் நித்தியத்திற்கு போகும் வரை உள்ள நாட்கள். இந்தக் காலத்தில் செயல்பாடுகள் தொடர்ந்து நடக்கும். இது ஒரு அளக்கப்பட்ட கால அளவாகும். இந்த காலத்தை நம் நிறுத்த முடியாது. கடந்த காலத்தை நாம் கூப்பிட்டு வா என்று சொல்ல முடியாது. அதுபேல, நாம் நினைத்தால் அல்லது விரும்பினால் காலத்தை நீட்டிக்கவும் முடியாது.

இவ்வளவு விசேஷம் வாய்ந்த காலத்தை நாம் தேவனிடம் இருந்து பெற்று இருக்கும்போது அதை பயன்படுத்தாமல் வீணடிக்கும்போது பல தீமைகளை சந்திக்க நேரிடுகிறது. பலர் ஏன் வெற்றியைக் காணவே முடியவில்லையே என்று வியக்கின்றனர். எனக்கு ஏன் ஏழ்மை என்று ஓயாமல் நினைக்கின்றனர். என்னால் ஏன் சுகமாக வாழ்வை அனுபவிக்க முடிய வில்லை என்று ஆச்சரியப்படுகின்றனர். காரணம், தங்களுடைய நேரத்தை ஞானமாக செலவழிக்க மறுத்ததின் விளைவு. சிலர் எந்த வேலையும் செய்யாமல் சோம்பலுள்ளவர்களாய் இருப்பதினால் காலத்தை வீணாக்கி விடுவதோடு பல தீமையான வழக்கங்களையும் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். விளையாண்டே நேரத்தைப் போக்குவது, பிறரைப் பற்றி பேசியே பொழுதை கழிப்பது. " ..... இப்படிப்பட்டவர்கள் சோம்பலுள்ளவர்களாய் வீடு வீடாய்த் திரியப் பழகுவார்கள்; சோம்பலுள்ளவர்களாய் மாத்திரமல்ல அலப்புகிறவர்களாயும், வீணலுவற்காரிகளாயும் தகாத காரியங்களைப்

பேசுகிறவர்களாயுமிருப்பார்கள் " (1 தீமோ. 5:13). என்று வாசிக்கிறோம்.

இன்னும் சிலர் தீய புத்தகங் களை படிப்பது, பல அமைப்புகளில் சிக்கிக் கொண்டு எதையும் உருப் படியாய் செய்யாமல் காலத்தை கழிப்பது என்று இருக்கிறார்கள். எப்போது பார்த்தாலும் துக்கமும், கவலையும் பற்றிப்பேசி கவலையை இழுத்துப் போட்டுக் கொண்டு காலத்தைக் கழிப்பவர்கள் ஒரு ரகம். பிரயோஜனமற்ற வேலையைச் செய்து காலத்தை வீணடிப்பது ஒரு வகை. இப்படி பல வழிகளிலும் காலத்தின் அருமையை உணராமல் வீணாக்கு பவர்கள் இருக்கவே செய்கிறார்கள்.

கிறிஸ்தவர்களாகிய நாம் காலத் தைப் பற்றிய உண்மையை அறிந்து வாழ்பவர்களாக இருக்க வேண்டும். நாம் பெற்றிருக்கும் காலம் தேவனால் கொடுக்கப்பட்ட ஒன்று. நாம் எதைச் செய்ய வேண்டு மென்று விரும்புகிறோமோ அதற்குக் காலம் போதுமான தாக இருக்கிறது. ஞானமாக பயன் படுத்தப்பட வேண்டும். காலம் குறுகினதாயிருக் கிறது. இதுபற்றி யாக்கோபு ஆசிரியர் கூறும் போது, " மேலும் நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒருவருஷம் தங்கி, வியாபாரஞ் செய்து, சம்பாத்தியம் பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக் காலந் தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே " (யாக். 4:13,14) என்று கூறுகிறார்.

அப்படியானால், இக்குறுகிய காலத்தை சரியாக பயன்படுத்த வேண்டும். தேவனை ஆராதிக்க வேண்டும். வேலை செய்ய வேண்டும். ஓய்வு எடுக்க சிறிது நேரத்தை ஒதுக்க வேண்டும். நம் அருகில் இருப்பவர் களுக்கு தேவனையும், இயேசுவை யும் பற்றி கற்றுக்கொடுக்க வேண் டும். தேவனுக்கு எது பிரியமோ அதையே செய்ய வேண்டும்.

நம்மிடம் எது இருக்கிறதோ இல்லையோ காலம் நம் கையில் இருக்கிறது. நேற்று போனது மீண்டும் வராது. கூப்பிட முடியாது. நாளை இன்னும் வரவில்லை. ஒரு வேளை அது நமக்கு வராமல் கூட போகலாம். இன்று நம் கையில் உள்ளது. இன்றைய நாளை தேவனுக்காக பயன்படுத்துவோம். " நித்திரையை விட்டு எழுந்திருக்கத்தக்க வேளையா யிற்றென்று, நாம் காலத்தை அறிந்த வர்களாய் இப்படி நடக்க வேண்டும். நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது " (ரோமர் 13:11) "அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவிகொடுத்து இரட்சணிய நாளிலே உனக்கு உதவி செய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம். இப்பொழுதே இரட்சண்ய நாள் " (2 கொரி. 6:2).

இந்த வசனப்பகுதிகள் எல்லாம் நமக்கு எச்சரிப்புக்காக கொடுக்கப்பட்டிருக்கிறது. அஜாக்கிர தையாய் இருப்போமானால் ஏமாந்து போவோம். பொல்லாத நாட்களாக இருப்பதால் காலத்தின் அருமையை உணர்ந்து ஆத்தும பாரம் கொள் வோம்.

நம்மை சுற்றிலும் இருக்கிற மக்கள் இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டுக் கொள்வோம். நம் வேலையே பெரிது என்று எண்ணி சுயநல ஜீவிகளாக மாறி விட வேண்டாம். அழிந்து போகிற ஆத்துமாக்கள் மேல் கரிசனை கொள்வோம். பரிசுத்தமாய் வாழ வேண்டுமென்று தீர்மானித்து அதிக நேரத்தை அதற்கு ஒதுக்கு வோம்.

கிறிஸ்துவுக்குள் அருமை யானவர்களே, நாம் எப்படி காலத்தை கழித்துக் கொண்டிருக்கிறோம்? என்று நமக்கே நன்றாகத் தெரியும். நமக்கும் பிரயோஜனமில்லாமல், பிறருக்கும் பயனில்லாமல் வாழ்ந்து கொண்டுள்ளோமா? வாழ்க்கையில் காலம் முக்கியம். அதை வீணடித்து விடவேண்டாம். மாறாக காலத்தை ஆதாயப்படுத்திக் கொள்வோம்.

நமக்காகவே காலத்தை செலவு செய்யாமல் கர்த்தருக்கே அதிக நேரத்தை செலவு செய்வோம். கர்த்தருக்காக அதிக காலம் செலவு செய்யப்படும் பொழுது நித்திய காலமாய் நாம் அவருடன் இருப்போம். ஆமென்.

## தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் பெரிய காரியங்கள்

1. நமக்கு விரோதமாக குற்றம் செய்கிறவர்களை மன்னிக்க வேண்டும் (லூக். 17:1,4)
2. எந்தச் சூழ்நிலையிலும் நம் சத்துருக்களை சிநேகிக்க வேண்டும் (மத்தேயு 5:43,44)
3. வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாக இருக்க வேண்டும் (1 தீமோ. 4:16)
4. மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும் (வெளி. 2:10).

ஒரு காரியத்தைக் குறித்து தேவனுடைய வாக்குத்தத்தம் உங்களுக்கு இருக்குமானால், அது உங்களுக்கு போதாதா?

தேவன் எப்போதுமே தம்முடைய குமாரனுடைய ஜெபத்தைக் கேட்கிறார், தேவனுடைய குமாரன் என்னில் உருவானால், பிதா எப்போதுமே என் ஜெபத்தை கேட்பார்

வாலிபர் பகுதி

# ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காண...

**Bro. Benny Martin**

**வா**லிபர்களாகிய உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நல்நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாகவே, நாமெல்லாரும் தேவன் நமக்கு ஒவ்வொரு வருடத்தைத் தரும் போது, அடுத்த வருடத்தையும் நாம் காணும்படி அவர் நமக்கு ஜீவனைத் தர வேண்டும் என்று வாஞ்சிக்கிறோம், ஏங்குகிறோம். வேறுவிதமாகச் சொன்னால், நாம் இவ்வுலகில் அதிக நாட்கள் வாழ ஆசைப்படுகிறோம். அப்படி ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருப்பதை வேதாகமம் தவறு என்றோ பாவம் என்றோ கூறுவதில்லை. மாறாக, அதற்கென்று தேவனால் கட்டளையிடப்பட்டிருக்கிற காரியங்களை செய்ய வேண்டுமென்றே வலியுறுத்துகிறது. புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பேதுரு இதுபற்றிச் சொல்லும் போது, " ஜீவனை விரும்பி, நல்ல நாட்களை காண வேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத்தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக் காத்து, பொல்லாப்பை விட்டு நீங்கி நன்மை செய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின் தொடரக்கடவன்" என்று புத்திச் சொல்கிறார் (1 பேதுரு 3:10,11).

பேதுருவால் மேற்கோள்காட்டப்பட்டிருக்கிற, சிந்தையை ஈர்க்கும் இவ்வாக்கியத்தை கவனித்துக் கூடுதலான தகவல்களுக்காக அதை ஆராய்ச்சி செய்யாமல், யார் தான் கடந்து போவார்? வேறுவிதமாகச் சொன்னால், அதிக நாட்கள் வாழ யார் தான் விரும்புவதில்லை? நல்ல நாட்களை யார் தான் விரும்புவதில்லை? இந்தப் பாழாய்ப்போன உலகில் பெரும்பாலும் நாம் பலவிதமான பாடுகள் படுகிறோம். பல்வேறுபட்ட நெருக்கடிகளைச் சந்திக்கிறோம். அவைகளின் வழியாய் கடந்து போகிறோம். பிரியமானவர்களே, இன்றைய நாட்களில் வாலிபர்கள் வயதானவர்கள் என்று எல்லோருமே ஆயுள் நாட்களை அதிகரிக்க என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்கிறார்கள். சமச்சீரான உணவு, உடற்பயிற்சி, தூக்கம் என்று எல்லாவற்றிலும் கவனம் செலுத்தினாலும் கவலை என்னும் அழையா விருந்தாளி அதிக ஆயுசு நாட்கள் என்கிற கனவைக் கலைத்து விடுகிறது. அப்படியென்றால், ஆயுசு நாட்களை அதிகப்படுத்துவதற்கு என்ன தான் வழி என்னும் மாபெரும் கேள்விக்கு தீர்வாய், அருமருந்தாய் அமைவது தான் (1 பேதுரு 3:10,11) வசனங்கள்.

## I ஜீவனை விரும்புதல்

இவ்வுலகில் பலர் ஜீவனை விரும்பாமல் இருப்பது துரதிஷ்டவசமானது. வருடந்தோறும் லட்சகணக்கான மக்கள் தற்கொலையினால் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள். மற்றவர்கள் அந்த அளவுக்குப் போகா விட்டாலும் கூட வாழ்க்கையை வெறுத்தவர்களாய், மகிழ்ச்சியற்றவர்களாய்

வாழ்கிறார்கள். இதில் வேதனைப்பட வேண்டிய, வெட்கப்பட வேண்டிய காரியம் என்னவென்றால், வாழ்க்கையே வெறுத்துவிட்டது என்று சொல்கிற கூட்டத்தில் தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கிறவர்களும் இருக்கிறார்கள் என்பதுதான். பிரியமான வாலிபக்கண்மணிகளே! இப்போது நாம் ஜீவனை விரும்ப எது காரணிகளாக அமைகின்றன அல்லது எது நம்மை ஊக்கப் படுத்துகின்றன என்று பார்ப்போம்?

முதலாவது, நாம் தேவ சாயலில் படைக்கப்பட்டிருக்கிறோம் (ஆதி. 1:27); அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம் (அப். 17:28). ஆகவே, ஜீவனை விரும்ப முடியும்.

இரண்டாவது, நம் கண்ணீரைத் துடைக்க, நம்மை விசாரிக்க (1 பேதுரு 5:7). நம் ஜெபங்களுக்கு பதில் கொடுக்க தேவன் இருப்பதால் நாம் ஜீவனை விரும்ப முடியும்.

மூன்றாவது, நாம் மரணத்தைத் தழுவும் போது கூட ஜீவனை விரும்ப முடியும். ஏனென்றால், நம் சரீரம் ஒரு விதையைப் போல் மண்ணில் விதைக் கப்பட்டு (1 தெச. 4:13) கண்ணீரல்லாத, கவலையில்லாத தேசத்தில் (வெளி. 21:4) நம் ஜனத்தாரோடே சேர்க்கப்படும் அந்த நாளை எதிர்நோக்க முடியும் (ஆதி. 25:8).

எனவே, பிரியமான வாலிப உள்ளங்களே! நாம் ஏன் இந்தப் பூமியில் பிறந்தோம் என்று வாழ்க்கையே வெறுத்தவர்களாய் நாம் பேசாமல் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஜீவனை எண்ணி, வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும் ரசித்து, ருசித்து கர்த்தருக்குள் வாழ காற்றுக் கொள்ள வேண்டும். தேவனுக்கு உடையவைகளாகிய நாம் சரீரத்தினாலும், நம் ஆவி யினாலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் (1 கொரி. 6:20). பூமிக்குரிய கூடாரமாகிய நம் சரீரம் அழிந்துபோனாலும், பரலோகத்தில் நமக்கு நித்திய வீடு உண்டு என்பதை உணர்ந்தவர்களாய் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் (2 கொரி. 5:1,2).

## II நல்ல நாட்களைக் காணுதல்

நல்ல நாட்கள் என்றால் என்ன? கெட்ட நாட்கள் என்றால் என்ன? பல வாலிபர்கள் வெளிப்புற சூழ்நிலைகளை அளவுகோலாக எடுத்துக்கொண்டு இது நல்ல நாள், அது கெட்ட நாள் என்று தீர்மானித்துக் கொள்கிறார்கள். உதாரணமாக, அவர்கள் வாழ்க்கையில் எதையாவது சாதித்து விட்டாலோ, புதிய உயரங்களைத் தொட்டாலோ அல்லது செழிப்பான காலங்கள் வந்தாலோ அவைகளை நல்ல நாட்களென்றும், பொருளாதார மந்த நிலையில் இருக்கும் போதோ, வியாதியால் அவதிப்படும்போதோ அந்த நாட்களைக் கெட்ட நாட்க ளென்றும் வெளிப்புறமான சூழ்நிலைகளை அடிப்படையாக வைத்தே நாட்களைக் கணக்கிடுகிறார்கள்.

ஆனால், நாம் வேதாகமத்தில் பார்க்கும்போது பவுலும், சீலாவும் அடிக்கப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டபோதும் நடு இராத்திரியிலே அவர்கள் ஜெபம் பண்ணி, சந்தோஷமாய் தேவனை எப்படித் துதித்துப் பாடினார்கள் (அப். 16:25). எப்படி அவர்களால் அப்படிச் செய்ய முடிந்தது? பவுலுக்கும், சீலாவுக்கும் அது நல்ல நாளாகத்தான் இருந்திருக்கிறது. நமக்கு இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருந்தால் அது வாழ்க்கையிலேயே மிகவும் மோசமான அல்லது கெட்ட நாள் என்று முத்திரை குத்தியிருப்போம். எனவே, மகிழ்ச்சியான நல்ல நாட்களைத் தீர்மானிப்பது வெளிப்புறமான

சூழ்நிலைகள் அல்ல, நம் மன நிலைதான். தேவன் தரும் எல்லா நாட்களையும் நாம் நல்ல நாட்களாகவே எடுத்துக்கொண்டு அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். எந்த ஒரு மனிதனும் நரகத்தில் ஒரு நாளைக் கழிக்கும் வரை உண்மையாகவே கெட்ட நாள் வாழ்க்கையில் எது என்பதை அறிந்து கொள்ளமாட்டான்.

## III தீர்வு

தேவதாசனாகிய பேதுரு ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் என்ன செய்ய வேண்டும் என்கிற கேள்விக்குத் தீர்வாக 1 பேதுரு 3:10,11 வசனங்களில் விளக்கம் கொடுத்துள்ளார். முதலாவது, ஒரு மனிதன் பொல்லாப்புக்குத் தன் நாவை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டு மென்று சொல்கிறார். நாவு என்பது ஒரு சிறிய உறுப்பாக இருந்து கொண்டு எந்த ஒரு பெரிய மனிதனையும் கட்டுப்படுத்துகிறது (யாக். 3:5,8). அது அடங்காத பொல்லாங்குள்ளதும், தேவன் வெறுக்கிற ஏழு காரியங்களில் மூன்றைக் கொண்டதாகவும் இருக்கிறது. அதாவது, நாவு சம்மந்தமாக இருக்கிறது பொய் நாவு, அபத்தம் பேசும் பொய்ச் சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல் போன்றவைகளாகும் (நீதி. 6:17,19). இது மட்டுமல்லாமல் பெருமை, முகஸ்துதி, வம்பளப்பு, தவறான தகவல், அவதூறு போன்ற காரியங்களிலும் நாவின் பங்களிப்பு அதிகமாயிருக்கிறது.

அடுத்ததாக, ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காண வேண்டு மென்றிருக்கிறவன் பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மை செய்ய வேண்டும். பலர், அதிலும் குறிப்பாக நாங்களும் தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் கூட இந்த அடிப்படை உண்மையைப் புரிந்து கொள்ள சிரமப்படுவது ஆச்சரியமாக இருக்கிறது. தேவன் தம்முடைய பிள்ளைகள் பொல்லாப்பை, தீமையை வெறுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார் (நீதி. 8:13). அதே போல், நாம் நன்மையானவை களை சக மனிதர்களுக்குச் செய்யும் போது தேவனிடத்திலிருந்து நன்மையை எதிர்பார்க்க முடியும். கடைசியாக, பேதுரு ஆசிரியர் ஜீவனை விரும்பி, நல்ல நாட்களை காணவேண்மென்றிருக்கிறவன் சமாதானத்தைத் தேடி அதைப்பின் தொடரக்கடவன் என்று சொல்கிறான். இன்று பலர் சண்டை பண்ணுகிறவர்களாக, அதையே பொழுதுபோக்காக கொண்டிருப்பவர்களாக இருப்பதை நாம் பார்க்கிறோம். அவர்களிடம் சமாதானம் என்பது ஒரு பேச்சுக்குக்கூட இருக்காது. ஆனால், நாம் சமாதானத்தைத் தேடி, அதைப்பின் தொடர வேண்டுமென்று தேவனால் கட்டளையிடப்பட்டிருக்கிறோம்.

பிரியமான வாலிபக் கண்மணிகளே, நம்மெல்லோருக்கும் இவ்வுலகில் அதிக நாட்கள் வாழவேண்டுமென்றும், வாழும் போது நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றும் தணியாத ஆசை இருக்கும். அவைகளை நமதுடையதாக்கிக் கொள்ள எத்தனையோ சரீர முயற்சிகளை நாம் எடுக்கிறோம். சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது என்று தேவன் சொல்கிறபடியால் (1 தீமோ. 4:8). சரீர முயற்சியை விட்டுவிட்டு பொல்லாப்புக்கு நம் நாவையும், கபடத்துக்கு நம் உதடுகளையும் விலக்கிக் காத்து, பொல்லாப்பை விட்டு நீங்கி நன்மை செய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின் தொடரும் போது, தேவன் நம் ஆயுசு நாட்களை பெருகச் செய்வார். இவ்வுலகிலும் நல்ல நாட்களை காணச் செய்வார், வரும் உலகத்திலும் நல்ல நாட்களை காணும் பாக்கியம் தருவார்.

சிறுவர் பகுதி

# "மனாசே" நல்லவனாக மாறிய துன்மார்க்க ராஜா

Bro. ABEL R. NAYAGAM

பிரியமான தம்பி, தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நீங்கள் அனைவரும் சுகமாகவும், சந்தோஷமாகவும் இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். தொடர்ந்து இந்த இதழின் மூலம் நீங்கள் பயனடைய வேண்டும் என்று ஜெபிக்கிறேன். முழு ஆண்டு தேர்வுக்காக ஆயத்தம் செய்து கொண்டிருப்பீர்கள், அப்படித் தானே? சரி, உங்கள் நேரத்தை அதிகமாக நான் எடுத்துக் கொள்ளப் போவது இல்லை. நாம் பாடத்திற்கு செல்லலாம்.



யூதாவை ஆண்ட மிக மோசமான இராஜாக்களில் மனாசே என்ற ராஜாவும் ஒருவர். மனாசே ராஜா வின் அப்பாவான எசேக் கியா ராஜாவோ, தேவ னை சேவித்து, ஜனங்களுக்கு நல்ல காரியங்களைத் தான் அரசாண்ட நாட்களில் செய்தார். ஆனால், மனாசேயோ தன் தகப்பனிடமிருந்து எந்த நல்ல காரியங்களையும் கற்றுக் கொள்ள வில்லை.

மனாசேயும், தன் தேசத்திலே வாழ்ந்து வந்த ஜனங்கள் அனைவரும் மெய் தேவனை விட்டு விலகி, வேறே தேவர்களைச் சேவிக்க தொடங்கினார்கள். அவர்கள் சேவித்த பொய் தேவர்களுக்கு சிலைகளையும், பலி பீடங்களையும் கட்டினார்கள். உண்மையான மெய் தேவனை சேவிக்க சாலமொன் ராஜாவால் கட்டப்பட்ட தேவாலயத்திலே அந்நிய தேவர்களின் சிலையை மனாசே வைத்தான். அதுமட்டுமல்ல, அந்த அந்நிய தேவர்களுக்காக, தன் சொந்தக் குழந்தைகளை பலியாக கொடுத்தான். பாருங்கள் இந்த மனாசே எவ்வளவு மோசமானவன் என்று!!

மனாசே செய்த தீமையான காரியங்களைப் பார்த்த தேவன் அவனைத் தண்டித்தார். அசீரியர்களின் படையை தேவன் மனாசேவிற்கு எதிராக அனுப்பி, அவன் பாபிலோனுக்கு சிறை பிடித்துச் செல்லப்பட்டான்.

அவன் பாபிலோனில் சிறைக் கைதியாக இருந்த பொழுது, " தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கெஞ்சி தன் பிதாக்களின் தேவனுக்கு முன்பாக மிகவும் தன்னைத் தாழ்த்தினான் " என்று 2 நாளா. 33:12ல் வாசிக்கிறோம்.

இங்கே தேவன் மனாசேயின் ஜெபத்தை கேட்டு, அவனைத் திரும்ப எருசலேமிலுள்ள தன்னுடைய ராஜ்யத்திற்கு வரப் பண்ணினார். "கர்த்தரே தேவன் என்று மனாசே அப்பொழுது அறிந்தான் ". (2 நாளா. 33:13).

அவன் தன் பாவத்தை உணர்ந்து மனந்திரும்பினதோடு நிறுத்தாமல், " கர்த்தருடைய ஆலயத்திலிருந்து அந்நிய தேவர்களையும், அந்த விக்கிரகத்தையும் எடுத்துப் போட்டு, கர்த்தருடைய ஆலயமுள்ள மலையிலும், எருசலேமிலும் தான் கட்டியிருந்த எல்லாப் பலிபீடங்களையும் அகற்றி, பட்டணத்திற்குப் புறம்பாகப் போட்டுவித்து, கர்த்தருடைய பலிபீடத்தை செப்பனிட்டு, அதின் மேல் சமாதான பலிகளையும் ஸ்தோத்திர பலிகளையும் செலுத்தி இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைச் சேவிக்க வேண்டும் என்று யூதாவுக்கு கட்டளையிட்டான் " (2 நாளா. 23:15,16).

பிள்ளைகளே! மனாசே தேவனுக்கு பிரியமில்லாத ஒரு ராஜாவாக இருந்தும், தன் தவறுகளை உணர்ந்து தேவனிடம் திரும்பினான். இரக்கமுள்ள தேவனாகிய நம் தேவன் அவனை ஏற்றுக் கொண்டார்.

நாமும் ஒருவேளை தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களைச் செய்கிறவர்களாய் இருந்தால் நாம் நம் தவறுகளை உணர்ந்து, தேவனை நோக்கி நம் வழியை திருப்பினால், நம்மை மன்னித்து ஏற்றுக்கொள்வார். ஆம், நம் தேவன் இரக்கமும், அன்பும் நிறைந்தவர்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

# நிழலும், நிஜமும்

*(The Shadow and the Reality)*

**Bro. J.H. James Rajakumar**

அன்பானவர்களே! சென்ற டிசம்பர் 2013ல் நான் எழுதிய போது எபிரெயர் 8ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட புதிய உடன்படிக்கையைக் குறித்து பேசியிருந் தோம். அப்போது உடன்படிக்கை செய்வது என்பது ஒரு திருமணமாயிருக்கிறது. திருமண மேடையில் மணமகள், மணமகனுடைய பெயரைச் சொல்லி அவனோடு வாழுவதைப் பற்றி அறிக்கையாக சொல்வாள். அதுபோல நாமும் கிறிஸ்தவர்களாக வாழுவதற்கு பாவத்தையல்ல, கிறிஸ்துவையே அறிக்கை செய்ய வேண்டும் என்று பார்த்தோம். (அப். 8:37). இதன்படி இன்றைய நாளில் பாவ அறிக்கை வாங்கிக் கொண்டு ஞானஸ் நானம் கொடுத்துவிட்டு, நாங்களும் கிறிஸ்தவ ஊழியர்கள் என்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வது மட்டுமல்ல அநேக ஆத்துமாக்களையும் அறியாமையின் குழியிலே தள்ளிவிட்டு வேடிக்கை பார்க்கும் நாமகரண மக்களை குறித்து பரிதாபப்படுகிறேன். (மத். 15:13,14).

இப்பொழுது எபி. 9-ம் அதிகாரத்திற்குள்ளாக கடந்து செல்வோம். தேவன் மோசேக்கு மலையிலே காண்பித்த மாதிரியின்படியே சிறிதும் மாறாமல் அமைக்கப்பட்ட ஆசாரிப்பு கூடாரத்தைப் பற்றி பரிசுத்த ஆவியானவர் பேசுகிறார். இஸ்ரவேலர் வனாந்திரத்தில் இருந்தபோதும், அவர்கள் கானான் தேசத்தில் வாழ்ந்த காலங்களிலும் ஒரேயொரு கூடாரம் அல்லது தேவால யத்தை தேவன் அனுமதித்திருந்தார். ஆகையால், இன்றைய நாளில் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஒரேயொரு தேவாலயம் அல்லது சபையை தான் தேவன் அனுதிப்பார் என்பது உறுதி.

| பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|
| ஒரு ஆசாரிப்பு கூடாரம் அல்லது ஒரு தேவாலயம் (யாத். 33:7; 1 இராஜா 6:37,38) | மக்கள் தான் சபை அல்லது தேவாலயம் (1 கொரி. 3:16) |

பழைய ஏற்பாட்டின் ஆசாரிப்பு கூடாரத்தில் இரண்டு பாகங்கள் இருந்தன. ஒன்று பரிசுத்த ஸ்தலம் மற்றொன்று மகா பரிசுத்த ஸ்தலம். இந்த முதலாம் பாகமான பரிசுத்த ஸ்தலத்தில் ஆசாரியர்கள் தினந்தோறும் பிரவேசிப்பார்கள். இந்த பரிசுத்த ஸ்தலம் இன்றைக்கு சபைக்கு ஒப்பிடலாம். இதில் எல்லா ஆசரியர்களும் இருக்கிறார்கள் (வெளி. 1:6; 1 பேதுரு. 2:5,9). இதன்படி இரட்சிக்கப்பட்ட அனைவரும் ஆசாரியர்களாயிருக்கிறோம். இதில் பெரிய ஆசாரியன் சிறிய ஆசாரியன் என்பதெல்லாம் இல்லை. எல்லோரும் சமமான ஆசாரியர்களே. இரண்டாம் பாகம், மகா பரிசுத்த ஸ்தலம். இதில் ஒரேயொருவர் மாத்திரமே பிரவேசிக்க முடியும். அதுவும் வருஷத்திற்கு ஒரு முறைதான். (எபி. 9:7). அவர் பிரதான ஆசாரியர். இப்பொழுது விவரங்கள் பார்க்கலாம். பரிசுத்த ஸ்தலத்தில் குத்துவிளக்கும், மேஜையும் அதன் மீது

தேவ சமூகத்து அப்பங்களும் இருந்தன. விளக்குக்கு எண்ணெய் ஊற்றுவது தேவ சமூகத்தப்பங்களை மாற்றுவது தூப பீடத்தில் தூபம் போடுவது ஆசாரியர்களின் வேலையாயிருந்தது. பரிசுத்த ஸ்தலமும், மகா பரிசுத்த ஸ்தலமும் இணைந்திருந்தது போல சபையும் பரலோகமும் இப்பொழுதும் இணைந்திருக்கிறது. இப்பொழுது அட்டவணையை கவனிப்போம்.

| பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|
| பரிசுத்த ஸ்தலம் | சபை அல்லது ஆலயம் |
| பரிசுத்த ஸ்தலம் | பரலோகம் |
| குத்து விளக்கு | கிறிஸ்துவே சபையில் ஒளியாயிருக் கிறார். |
| தேவ சமூகத்தப்பம் | கிறிஸ்துவே ஜீவ அப்பமாக (வார்த்தையாக) இருக்கிறார். |
| தூபத்தின் புகை மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் போனது | கிறிஸ்தவர்களின் ஜெபங்கள் பரலோகத்தில் தேவ சமூகத்தில் செல்கிறது. |
| பரிசுத்த ஸ்தலம் மகாபரிசுத்த ஸ்தலம் இவ்விரண்டிற்கும் நடுவில் திரைச் சீலை | கிறிஸ்து தம் சரீரத்தை திறையாக பயன்படுத்தி அதை பூமியில் விட்டு பரலோகம் சென்றார் (எபி. 10:19) |
| லேவி கோத்திரத்தின் ஆரோன் குடும்பத்தார் பிரதான ஆசாரியர் | அதேவேளையில் யூதகோத்திரத்து தெய்வீக தேவ குமாரர் பிரதான ஆசாரியர் |
| உடன்படிக்கை பெட்டியில் பழைய உடன்படிக்கையின் கற்பலகை இருந்தது. | புதிய உடன்படிக்கை பரலோகத்திலே தேவனுடைய சமூகத்தில் ஸ்தாபிக் கப்பட்டது. |
| காளை, வெள்ளாட்டுக்கடா மிருக இரத்தம் தெளிக்கப்பட்டது. | இயேசு கிறிஸ்துவின் சொந்த இரத்தம் தெளிக்கப்பட்டது. |
| ஆசாரியனுக்கு விசேஷ உடை இருந்தது | நீதியென்னும் வஸ்திரம் கொடுக்கப் பட்டது |
| லேவி ஆசாரியன் மரிக்கிறவனாக மாறிப் போகிறவனாக இருந்தான். | மரணத்தை வென்ற என்றென்றும் ஜீவிக்கிற புதிய ஏற்பாடு ஆசாரியர் கிறிஸ்து இருக்கிறார். |
| கூடாரம் துணியினால் அல்லது தேவாலயம் கற்களால் ஆனதாக இருந்தது. | கீழ்ப்படிகிற ஆத்துமாக்களால் ஆனதாக இருக்கிறது. |
| பூமிக்குரிய கூடாரத்திற்கு முன்பு பலிபீடம் அன்றைக்கு இருந்தது. | இன்றைக்கு நம்முடைய பலிபீடம் பரலோகத்தில் இருக்கிறது. |

இதை வைத்துப் பார்க்கும் போது கிறிஸ்து ஒருவரே மகாபரிசுத்த ஸ்தலமாகிய பரலோகத்தில் பிரவேசித்திருக்கிறார். மற்றவர்களெல்லாம் அவர் வந்து அழைத்து போகும் வரை காத்திருக்க வேண்டும். ஆனால், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எந்த ஒரு பிரதான ஆசாரியனுக்கும் மற்றவர்களை மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் அழைத்துப் போகும் உரிமை கொடுக்கப்பட வில்லை. ஆனால், தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரரான கிறிஸ்து வுக்குக் கீழ்ப்படிகிற ஆத்துமாக்களை கிறிஸ்துவின் வருகையின் நாளில் பரலோகம் அழைத்துச் செல்லும் உரிமையை கொடுத்திருக்கிறார். தேவன், கிறிஸ்துவின் மூலம் நம்மை படைத்தார். ஆகையால், நாமும் கிறிஸ்துவின் மூலம் தேவனிடத்தில் சேருகிறோம், சேருவோம். இது சிருஷ்டிப்பிலேயே திட்ட மிடப்பட்டதாகும். ஆகையால், வார்த்தையாகிய தேவன் மூலமாக மனிதன் சிருஷ்டித்த தேவன் இந்த மனித குலத்தை வீழ்ச்சியிலிருந்து மீட்டெடுப்பதற்கு வார்த்தையாகிய தேவன் மூலமாக மீட்பின் திட்டத்தை ஏற்படுத்தி நிறை வேற்றினார்.

எபி. 10 ஆம் அதிகாரத்தில் பழைய ஏற்பாட்டு காலத்தில் செலுத்தப்பட்ட பலிகளும் ஆராதனைகளும் நிழலானவைகள். ஆனால், கிறிஸ்துவின் மூலமாக உண்டாக்கப்பட்ட ஆராதனையே நிஜமானது தெய்வீகமானது என்றும் குறிப்பிட்டு, இந்த ஆராதனையை அசட்டை செய்கிறவன் ஒருக்காலும் மன்னிக்கப்படுவதில்லை என்கிறார்.

எபி. 11ம் அதிகாரத்தில் விசுவாசமுள்ளவர்களின் வாழ்க்கையையும் அவர்கள் தேவனுக்காக அவருடைய குமாரரான கிறிஸ்துவுக்காக (மேசியா வுக்காக) அனுபவித்த துன்பங்களையும் சொன்ன பிறகு, நம்மையல்லாமல் அவர்கள் பரிபூரணம் அடையவில்லை என்றும் அவர்களை விட நாமே சிறந்த காலத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம் என்றும் நம்மை உயர்த்துகிறார்.

எபி. 12-ல் இத்தனை திரளான சாட்சிகள் இருந்தும் வாழ்க்கையில் கஷ்டம் வரும் நேரங்களில் சிலர் விசுவாசத்தை விட்டு விலகிப்போதுபோல நாம் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்க முடியாது. நாம் தேவனுடைய பிள்ளைகளாக கிறிஸ்துவை நோக்கி கிறிஸ்துவின் வழியாக ஓட வேண்டும் என்கிற தேவ விருப்பத்தை பரிசுத்த ஆவியானவர் மிகவும் எளிமையான முறையில் உதாரணங்களோடு எச்சரித்து அறிவுறுத்துகிறார். இஸ்ரவேலர்களைப் போல பயங்கரமான சூழல் நமக்கு இல்லை. நாம் சமாதான கர்த்தரின் சமாதான ஆட்சியின் கீழே மன்னிக்கிற ஆட்சியின் கீழ் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். ஆகையால், பயத்தோடும், பக்தியோடும் சத்தியத்திற்கு கட்டுப்பட்டு நடக்கும்படி பரிசுத்த ஆவியானவர் நம்மை ஒழுங்குபடுத்தி தைரியப்படுத்துகிறார். இப்படியாக நம் அதிகாரத்தை நல்ல அறிவுரைகளோடு நல்ல கிறிஸ்தவர்களாய் வாழும்படி வழிநடத்துகிறார்.

யாக்கோபு, பேதுரு, யோவான், யூதா நிருபங்களும் பழைய சம்பவங் களை நாம் நமக்கு எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு நம்முடைய ஆத்துமா பரலோகம் சென்றடைய பிரயாசப்படுங்கள் என்கிறார்கள்.

யோவான் தன்னுடைய வெளிப்படுத்துதலில் கிறிஸ்துவின் தெய்வீகத்தை வெளிப்படுத்தி, சபைகளுக்கு, கிறிஸ்துவின் அதிகாரத்தையும், எதிர்பார்க்குதலையும் விவரித்து, தேவனிடமிருந்து கிறிஸ்துவானவர் பெறும் அதிகாரத்தை 4,5 அதிகாரங்களில் விவாதித்து, கிறிஸ்தவர்களை துன்பப் படுத்துகிற சாம்ராஜ்யத்தை தேவன் அழிப்பார் என்றும் ரோம் சாம்ராஜ்யத்தை வழி நடத்தின சாத்தானை கிறிஸ்து அழிப்பார் என்றும் கிறிஸ்தவர்களுக்கு விடுதலையும் நித்திய சந்தோஷத்தையும், சமாதானத்தையும் தருவார் என்றும் பிதாவாகிய தேவனும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் பழைய ஏற்பாட்டு விசுவாசிகளையும், புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களையும் அவர்க ளோடு பரலோகத்திலே என்றென்றுமாக வாழ வழி செய்து விட்டார்கள் என்ப தையும் நமக்கு சொல்லி நம்மை ஆறுதலிலும் தைரியத்திலும், விசுவாசத் திலும், பொறுமையிலும் வழிநடத்துவதற்கு எழுதப்பட்டுள்ளது. இத்துடன் நிழலும் நிஜமும் தொடர் நிறைவுறுகிறது. நாம் நிழலை தேடி போகாமல் நிஜத்தை பிடித்துக்கொண்டு வாழ்ந்து கிறிஸ்துவின் வழியாய் அவர் உபதேசத்தின் வழியாய் பரலோகம் சென்றடைவோமாக!.

தேவன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென். ✿

## நாளும், நடப்பும்

1. இந்தியாவின் 29 ஆவது மாநிலமாக தெலுங்கானா அறிவிப்பு
2. பெட்ரோல் டீசல் விலை மீண்டும் உயர்வு
3. பன்னிரெண்டாம் வகுப்பு அரசுத் தேர்வுகள் மும்முரமாக நடந்து கொண்டிருக்கின்றன.
4. இந்தியாவில் நிகழும் மதக்கலவரங்கள் கவலை அளிக்கின்றன. - அமெரிக்கா
5. மக்களவை தேர்தல் தமிழகத்தில் ஏப்ரல் 24ல் நடைபெறுகிறது.
6. ஆசிய கோப்பையை இலங்கை அணி வென்றது.

# பாடம்-40. களைகளைப் பற்றிய உவமை

Bro. K. பாஸ்கர்

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள் பல. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரலோக இராஜ்யமாகிய கிறிஸ்துவின் சபையைக் குறித்து உவமைகளாக போதித்தார். இந்த உவமையில் களைகளைப் பற்றிய உவமையைப் போதித்து வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை வெளிப்படுத்து கிறார். அதை நாம் இந்த மாதக் கட்டுரையில் படித்து அறிந்து கொள்ளுவோமாக!

## I களைகள் என்றால் என்ன?

களைகள் என்றால் போலியானது. அது கோதுமைச் செடியைப் போன்று இருந்தன. அது கோதுமை விதையைப் போன்று தோற்றமளிக்கக் கூடியது. பார்வைக்கு கோதுமை செடி போன்றே இருக்கும். ஆனால், கோதுமை செடி அல்ல. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து களைகளைப் பற்றிய உவமையைக் கூறும் பொழுது, பரலோக ராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரை பண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து கோதுமைக்குள் களைகளை விதைத்து விட்டுப் போனான். பயிரானது வளர்ந்து கதிர்விட்டபோது களை களும் காணப்பட்டது. (மத். 13:24,26). களைகளின் வளர்ச்சி ஆரம்பத்தில் அபார வளர்ச்சியை அடைந்திருந்தது. இந்த உவமையில் பரலோக ராஜ்யம் என்பது கிறிஸ்துவின் சபை எனப்படும். அது நல்ல விதை யாகிய கோதுமை யைக் குறிக்கிறது. இது ராஜ்யமாகிய சபையின் புத்திரர் (மத். 13:37,38) சபையின் விரோதிகள் சத்துரு சபைக்கு விரோதமாக செயல்பட்டு களைகளை கோதுமைக்குள் அதாவது சபைக்குள் விதைத்து விட்டுப் போனான். சபைக்கு விரோதமாக செயல்பட்டு பிரிவினைகளும் இடறல்களையும் ஏற்படுத்துவான் சத்துரு. அவன் பிசாசு, (மத். 13:38) களைகள் என்பது பொல்லாங்கனுடைய புத்திரர்.

சபையின் ஆரம்ப நாட்களில் அதாவது முதல் நூற்றாண்டில் அப்போஸ்தல னாகிய பவுல் சபைக்குள் களைகள் அதாவது, மாறுபாடான உபதேசங்களை போதிப்பார்கள் என்று சொன்னார். இதனால் சபையில் பிரிவினைகள் தோன்றும் என்று எச்சரித்தார் (அப். 20;28,30). இதன்படி கிறிஸ்துவின் சபையில் பிரிவினை உண்டாயின. பல நாமகரணக் கூட்ட சபைகள் உண்டாயின. இந்த நாமகரண கூட்ட சபைகள் அனைத்தும் களை களாக இருக்கின்றன. இது பிரிவு கிறிஸ்துவின் சபையும் அதன் ஆதர வாளர்கள், கத்தோலிக்கம், புராட்டஸ்டண்ட் கூட்டத்தார் மற்றும் பெந்தெ கொஸ்தே கூட்டத்தார் யாவரும் களைகளாக இருக்கின்றனர்.

## II களைகள் எப்படி உண்டானது?

இந்த உவமையில் வரும் வீட்டெஜமானுடைய வேலைக்காரர் தங்கள் எஜமானிடத்தில் வந்து ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள். அதற்கு அவன் சத்துரு அதைச் செய்தான் என்றான். சத்துரு என்பவன் பிசாசு. (மத். 13:27,28,39). உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான் என்று வேத வசனம் கூறுகின்றது. (1 பேதுரு 5:8). மேலும், அவனைக் குறித்து வேத வசனம் கூறுகிறதாவது; அவன் சாத்தான் (யோபு 1:6,12). சோதனைக்காரன் (மத். 4:3) பொல்லாங்கன் (மத். 13:9) கெர்ச்சிக்கிற சிங்கம் வலுசர்ப்பம் (வெளி. 12:3) பொய்களின் பிதா (யோவான் 8:44) தந்திர முள்ளவன் (2 கொரி. 11:3) அவன் சபைக்குள் அதாவது, கோதுமைக்குள் களைகளை விதைப்பான் (மத். 13:25) இதன்படி இன்று பிசாசுகளின் உபதேசம் உண்டு (1 தீமோத். 4:1). அதாவது விவாகம் பண்ணக்கூடாது, சில உணவுப் பொருட்கள் தீட்டானது (1 தீமோத். 4:2,5) சபையின் காணிக்கையை ஊழியர் தொடக்கூடாது, ஊழியருக்கு அதில் பங்கில்லை (1 கொரி. 9:1,14) விக்கிரக ஆராதனை அதாவது சிலை வழிபாடு செய்ய வேண்டும் (1 கொரி. 10:14). கைகளைத் தட்டி இசைக் கருவிகளைக் கொண்டு பாடி தேவனை ஆராதிக்க வேண்டும். (ஆமோ. 5:23; எபே. 5:19) மாதத்திற்கு ஒருமுறை கர்த்தர் பந்தி செய்ய வேண்டும். (அப். 20:7) அந்நிய பாஷை, அற்புத வரங்கள் இன்னும் ஒழியவில்லை (1 கொரி. 13:8,10) போன்ற உபதேசங்கள் யாவும் பிசாசுகளின் உபதேசம். இவைகள் அனைத்தும் சத்துரு விதைத்த களைகள்.

## III களைகளை வளரவிடுங்கள்

இந்த உவமையில் வரும் வேலைக்காரர் நாங்கள் போய் களைகளைப் பிடுங்கிப் போட உமக்கு சித்தமா என்று கேட்டார்கள் (மத். 13:28) அதற்கு அவன் வேண்டாம் களைகளைப் பிடுங்கும் போது நீங்கள் கோதுமையையுங் கூட வேரோடே பிடுங்காதபடிக்கு இரண்டையும் அறுப்பு மட்டும் வளர விடுங்கள் என்றான் (மத். 13:29).

பாலஸ்தீனா தேசத்தில் பயிர்களின் செடிகள் வளரும்போது களைச் செடியின் வேர்களுடன் பின்னிப் பிணைந்து வளரும். ஆகவே தான், அந்த எஜமான் வேண்டாம் களைகளைப் பிடுங்கும்போது கோதுமையையும் பிடுங்க நேரிடும் என்றான். மேலும், அந்த தேசத்தில் பயிர்கள் நடுதல்; பின்பு அறுவடை தான். இடையில் களை எடுத்தல் இல்லை. ஆதலால், அறுப்பு மட்டும் வளர விடுங்கள் என்றான். களைகளைப் பிடுங்குவதற்கு நமக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. அதன் வளர்ச்சியை நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்க வேண்டும். இதனால் மனதளவில் நமக்கு பெரும் பாதிப்பு உண்டு. உதாரணமாக, சோதோம் கொமோரா என்ற பட்டணங்களிருந்த மக்கள் அவர்களின் அவபக்தி, அக்கிரம செயல்களை நீதிமான் லோத்து என்பவர் நாள்தோறும் பார்த்து தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப் பட்டார். அதாவது, மனதளவில் பெரும் பாதிப்பு அவருக்கு இருந்தது போல

நமக்கும் நமது எதிராளிகளின் களைகளின் வளர்ச்சியைக் கண்டு பெரும் பாதிப்பு ஏற்படுவதுண்டு. அதனால் களைகளைப் பிடுங்க நமக்கு அதிகாரம் இல்லை. களைகளை அறுப்பு மட்டும் வளர விடுங்கள் என்பதற்குக் கீழ்ப்படிவோம்.

## IV களைகளின் முடிவு

களைகளைப் பற்றிய உவமையில் எஜமான் அறுப்புக் காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி முதலாவது களைகளைப் பிடுங்கி அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள். கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார் (மத். 13:30). அறப்புக்காலம் உலகத்தின் முடிவு. அறுக்கிறவர்கள் தேவ தூதர்கள். களைகளின் முடிவு அக்கினியால் அவைகள் அனைத்தும் சுட்டெரிக்கப்படும் என்றார். ஆண்டவர் இயேசு கிறிஸ்து (மத். 13:39,40) யோவான் ஸ்நானகன் பிரசங்கிக்கும் போது தூற்றுக் கூடை அவர் கையில் இருக்கிறது அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார். பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றார் (மத். 3:12).

களைகள் பரமபிதா நடாத நாற்றுக்கள். இவைகள் யாவும் உலகத்தின் முடிவிலே வேரோடே பிடுங்கப்படும் (மத். 15:13). ஆகவே, அன்பான வாசகர்களே, நம்மைச் சுற்றிலும் தேவனால் நடப்படாத நாற்றுக்கள் ஏராளமாக உள்ளன. அது கத்தோலிக்கமாகவும், சி.எஸ்.ஐ யாகவும், பெந்தேகொஸ்தேக்களாகவும் உள்ளன. இவைகள் எல்லாம் களைகள். நாம் ஒவ்வொருவரும் கோதுமை மணிகளாக இருக்க வேண்டும். வசன ரீதியாக செயல்படும் கிறிஸ்துவின் சபையே கோதுமை மணி. இதுவே கடைசியாக பரலோக களஞ்சியத்தில் சேர்க்கப்படும். ஆகையால், இன்றே கிறிஸ்துவின் சபையைத் தேடுவாயாக!

(தொடரும்)

## நான் சபை கூடி வராதபோது

1. அது என் விசுவாசத்தைக் குறித்து பலர் கேள்வி கேட்கும்படி செய்தது (யாக். 2:17)
2. அது சபை கூடி வரவேண்டும் என்னும் தெய்வீகக் கட்டளையை துணிந்து மீறுகிறவனாகக் காட்டியது. (எபி. 10:25)
3. அது கர்த்தரோடும், சக கிறிஸ்தவர்களோடும் ஐக்கியம் கொள்வதை விட, உலகத்தோடு ஐக்கியம் கொள்வதில் எனக்கு அதிக மகிழ்ச்சி இருக்கிறது என்று சிலர் முடிவுக்கு வர காரணமாகியது (2 கொரி. 6:14).
4. நான் உல்லாசப் பயணம் மேற்கொண்டு சபை கூடிவரத் தவறுவதால், உலகத்தை அதிகமாகவும், கர்த்தரை குறைவாக நேசிப்பதாகக் காட்டியது (2 தீமோ. 4:10).
5. நான் வேண்டுமென்றே சபை கூடிவரத்தவறும் நாளில், ஒளியில் நடக்கவும், சகோதரர்களின் ஐக்கியத்தை அனுபவிக்கவும் தவறிவிட்டேன் (1 யோவான் 1:7).

# பொருத்தமான சுவிசேஷம்

## The Relevant Gospel

### *Bro. Tim Nichols*

நமக்கு நெருக்கமானவர்களின் மரணம் வாழ்க்கையின் குறுகிய தன்மையை நமக்கு நினைவுபடுத்துகிறது. கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் இரண்டு நண்பர்களின் அடக்க ஆராதனையில் நான் கலந்து கொண்டேன். அதில் ஒருவர் நீண்ட நாட்கள் வாழ்ந்தவர். மற்றொருவர் இளம் வயதில் வாகன விபத்தில் எங்களை விட்டுப்பிரிந்து சென்றவர். மற்று மொரு பழைய நண்பர் சில நாட்களுக்கு முன்பு மாரடைப்பால் காலமானார். அவர் என்னை விட சில வருடங்கள் இளையவர்.

நான் படித்த பள்ளியில் இருபது வருடங்களுக்குப் பிறகு பழைய மாணவர்கள் மறுபடியும் ஒருவரையொருவர் சந்தித்த போது, என்னுடன் வகுப்பில் ஒன்றாகப் படித்த பத்துப் பேர் இந்த உலகத்தை விட்டுக் கடந்து சென்றதைக் கண்டுபிடித்தேன். அவர்களெல்லாரும் இளமையாகவும், ஆரோக்கியமாகவும் இருந்ததை நான் நினைத்துப் பார்க்கிறேன். நாங்கள் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது அவர்களில் இரண்டு பேர் என்னுடன் மல்யுத்தப் போட்டியில் கலந்து கொண்டனர். அதில் ஒருவர் நட்சத்திர விளையாட்டு வீரராக இருந்தார். பல்கலைக் கழக அணியில் அவரோடு நான் போட்டி போட முடியாததால் மற்றொரு போட்டியில் என்னைச் சேர வைக்க வற்புறுத்திக் கொண்டே இருந்தார்.

நான் மேலே குறிப்பிட்ட நபர் களோ அல்லது அவர்களு டைய குடும்பங் களோ அவர்கள் பற்றி இங்கே நான் குறிப்பிடுவதை எல்லாம் ஒரு பொருட்டாக எண்ணுவார்கள் என்று நினைக்கவில்லை. ஆனால், இவைகளெல்லாம் இந்தப் பூமியில் நம் வாழ்க்கை குறுகிய கால அளவைக் கொண்டது என நமக்கு நினைப்பூட்டுகிறது. இன்னும் அவைகளெல்லாம் கிறிஸ்தவம் உண்மையானது என்பதையும் நமக்கு நினைப்பூட்டுகிறது. நாம் பிரசங்கிக்கிற சத்தியம் சம்மந்தமில்லாமல் இருக்கிறது என்று சிலர் நம்மைப் பார்த்துச் சொல்லக் காரணம், கவர்ச்சியை விரும்புகிற நம் இளைய சமுதாயத்தின் கவனத்தை ஈர்க்கும்படி உயிரோட்டம் உடையதாக அது இல்லை அல்லது இந்த உலகம் எவைகளை நம்பி நடைமுறைப்படுத்த விரும்புகிறதோ அவைகளை உள்ளடக்கிய வெளிப்படைத் தன்மை கொண்டதாக இல்லையென்றும், அதன் மூலம் வாழ்க்கையின் மையக்கருத்தை அது இழந்து விட்டிருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள்.

சத்தியமானது மிகத் துல்லியமாக நம்முடைய தலைமுறை யினருக்கு சம்மந்தமுடையதாகவே இருக்கிறது. ஏனென்றால், அது மிகச் சுலபமாகப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில், இந்தக் குறுகிய கால வாழ்க்கையை விட்டு நித்தியத்திற்குள் பிரவேசிக்கப் போகிற எல்லா இடங்களிலுமிருக்கிற எல்லா ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொருந்தக் கூடிய அளவில் தான்

இருக்கிறது. சுவிசேஷத்திற்கு நாம் கீழ்ப்படியும் போது அது நமக்கு பரலோகத் திற்கான பயணச் சீட்டு ஆக இருக்கிறது. பரலோகம் தான் நம் குறிக்கோள், அதை அடைவதற்கு வழி சுவிசேஷம் தான். நுழைவுச் சீட்டு அலங்காரமாக இல்லை என்ற காரணத்திற்காக ஒரு போட்டியைக் காண யார் மறுப்பார்கள். நம் இளைய சமுதாயத்தின் கவனத்தை ஈர்க்கும்படி உயிரோட்டம் உடைய தாக அது இல்லை அல்லது இந்த உலகம் எவைகளை நம்பி நடைமுறைப் படுத்த விரும்புகிறதோ அவைகளை உள்ளடக்கிய வெளிப்படைத்தன்மை கொண்டதாக இல்லையென்றும், அதன் மூலம் வாழ்க்கையின் மையக் கருத்தை அது இழந்து விட்டிருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள்.

நாம் எந்த விசுவாசத்திற்காகப் போராடுகிறோமோ, அந்த விசுவாசம் முதல் நூற்றாண்டில் எப்படி ஒப்புக் கொடுக்கப்பட் டதோ அப்படித்தான் இன்றும் ஒப்புக் கொடுக்கப்படுகிறது. அது தொட்டிலிலிருந்து சுடுகாடு வரை பயணம் செய்கிற எல்லாருடைய தேவையையும் சந்திக்கிறது: ஒரு வாலிபன், ஒரு வயதான விவசாயி, நூலகக் காப்பாளர், ஓர் இசை அமைப்பாளர், ஒரு கூச்ச சுபாவமுடையவர், எல்லோரிடமும் சகஜமாகப் பழகுபவர், ஒரு கல்லூரித் தலைவர் என்று இப்படி எந்த பிரிவைச் சேர்ந்தவராக ஒருவர் இருந்தாலும் சுவிசேஷம் சரியானதாகவே உள்ளது. இப்பிரிவை சேர்ந்த யாராவது ஒருவர் தங்கள் சூழ்நிலைக்கேற்ப சுவிசேஷத்தை மாற்ற வேண்டுமென்று சொன்னால், அவர்கள் சுவிசேஷத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள வில்லையென்றே பொருள். அவருடைய விசேஷித்த தேவைகளுக்கேற்ப சுவிசேஷத்தை மாற்ற வேண்டும் என விரும்பினால் நம் போதனையையும், சுவிசேஷ நடைமுறையையும் மேற்சொல்லபட்ட பிரிவினரில் ஒரு சாராரைப் பிரியப்படுத்த மாற்றினால், அது வேறொரு சாரார் நற்செய்தியின் உபதேசத்தி லிருந்து விலகிச் செல்ல ஏதுவாகிவிடும். அத்தோடு, நம்முடைய பயணச் சீட்டை செல்லாததாகவும் ஆக்கிவிடும்.

எல்லோருக்கும் பொருள் படும்படியாக வடிவமைக்கப் பட்ட சுவிசேஷத் தின் தனித்தேவை எல்லோராலும் சமமாக பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். நம்முடைய அழிந்து போகிற சரீரங்கள் கல்லறையில் வைக்கப்படும் நாளிலே நம்மெல்லாருக்கும் நம்பிக்கை தேவைப்படுகிறது. நம்மெல்லாருக்கும் நம் பாவங்கள் மன்னிக்கப்படுவது அவசியமாயிருக்கிறது. நாமெல்லாரும் தேவ னோடு ஐக்கியத்தை மீட்டமைத்துக் கொள்வது அவசியமாயிருக்கிறது. இந்த சத்தியமானது உங்களுக்கு, மிக எளிமையானதாக இருந்தால், அதை மேற் கொண்டு மாற்றுவதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்று வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறோம். *பரலோகம் செல்வதற்கான ஒரே பயணச்சீட்டு கிறிஸ்துவின் சுவிசேஷந்தான் என்பதை மட்டும் எங்களால் உங்களுக்குக் காட்ட முடியும். உங்களுக்கு* இன்னும் அழகான பொழுது போக்கு அம்சமுள்ள பயணச் சீட்டு வேண்டுமென்றால், நீங்கள் வேறு எங்காவது தான் பார்க்க வேண்டும், ஆனால், இந்த வாழ்க்கை முடிந்து நித்தியம் காத்திருக்கும் போது அது உங்களை கனப்படுத்துமென்று எந்த நிச்சயத்தையும் எங்களால் அளிக்க முடியாது.

# தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு அனுதினமும் உதவிச் செய்கிறார்

## God Helps His Children Everyday

***Bro. Wayne Barrier***

ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்து ஜெயத்தோடு மறுபடியும் வந்து தம்முடைய சபையை உரிமைக் கொண்டாடி சபையோடு பரலோகம் போவதனால் நமக்கு உண்டாகும் நித்திய ஜீவனையும், சந்தோஷத்தையும் குறித்த வாக்குத்தத்தங்களினால் உறுதியாக ஊக்கப்படுத்தப்பட வேண்டும். நாம் ர்மையானவர்களாக இருந்தால், நம்முடைய நற்கிரியைகளின் அடிப்படையில் நாம் தகுதிப் பெற்றிருக்கும் அல்லது அடைய நம்பியிருக்கும் எந்த ஒரு வெகுமதியை விடவும் மேலானது என்பதை உணர்ந்து கொள்வோம். தேவனுடைய கிருபையால் பரலோக நம்பிக்கை நமக்கிருக் கிறது. ஆனால், இது நமக்கு எந்த அளவு முக்கியமாக இருக்கிறது என்பதை சிந்திக்க நேரம் எடுத்தால் தான் அது ந்த நம்பிக்கையில் நம்மை நிலைத் திருக்கச் செய்யும்.

தேவன் பரலோகம் மற்றும் அதன் பயன்களை குறித்து மட்டும் நமக்கு வாக்குத்தத்தம் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது, அவர் அனுதினமும் நம்மை வேறுபல வழிகளிலும் ஆசீர்வதிப்பார். இந்த ஆசீர் வாதங்கள் இப்பூமியில் நாம் உயிருள்ளவரை உண்மையுள்ளவர்களாய் வாழ முக்கியமானது. நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற அந்த ஆசீர்வாதங்கள் கீழ்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளன.

**தேவனுடைய தொடர்ச்சியான பிரசன்னம் :** மத்தேயு 28:20ல் உலகத்தை சுவிசேஷமாக்க வேண்டுமென்று நமக்கு கட்டளையிட்டு, நமக்கு ஒரு விசேஷித்த வாக்குத்தத்தையும் செய்திருக்கிறார்; " உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் " என்றார்.

**சுத்த மனச்சாட்சி, பாவத்திலிருந்து விடுதலை :** பவுல் ரோமர் 8:1ல் "ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை" என்று அறிவிக்கிறார். கிறிஸ்தவர்கள் கர்த்தருக்காக கனிகொடுக்கத்தக்கதாக வேலைச் செய்யவும், வாழவும் ஆக்கினைத் தீர்ப்பு மற்றும் பாவத்திலிருந்து விடுதலை மிகவும் அவசியமானதாகும். கிறிஸ்து மூலமாக இந்த விடுதலை யை நாம் அனுதினமும் பெற்றுக்கொள்ள முடியும்.

பெலன் எபேசியர் 3:16ல் பவுல் நாம் பலப்படுத்தப்பட முடியும் என்று சொல்கிறார். "அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய் பலப்படவும்" என்று பார்க்கிறோம். உறுதியான கிறிஸ்தவர்கள் தேவனிடத்திலிருந்து பெலத்தை பெற்றுக்கொண்டு சாத்தானின் வல்லமையையும், செல்வாக்கையும் எதிர்த்து அவைகளை மேற்கொள்ள முடியும்.

ஞானம் தரப்படுகிறது யாக்கோபு 1:5 இவ்விதமாகக் கூறுகிறது " உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் ". பலருக்கு அறிவிருக்கிறது, ஆனால், அதை ஞானம் என்று தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். நாம் இவ்வுலகில் ஆவிக்குரிய பிரகாரமாக பாதுகாப்பாக வாழ்வதற்கு இரண்டுமே நமக்கு அவசியமாகிறது.


ஜெபங்கள் பதிலளிக்கப்படுகிறது இயேசு லூக்கா 11:9ல் "கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" நம் அனுதின ஜீவியத்தில் மிகவும் வல்லமையான ஆயுதம் ஜெபமாயிருக்கிறது.

பராமரிப்பு, நோக்கம் : ரோமர் 8:28ல் " அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" என்று வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

கவலையிலிருந்து விடுதலை : " நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்" என்று (பிலி. 4:6,7) வசனங்களில் வாசிக்கிறோம்.

தேவன் தம்முடைய உண்மையுள்ள பிள்ளைகளுக்கு வாக்களிக்கும் காரியங்களுள் சிலவற்றை தான் நாம் இதுகாறும் பார்த்தோம். இந்த வாக்குத்தத்தங்கள் நம் தனிப்பட்ட வாழ்க்கையில் அன்றாடம் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அப்படியிருக்கும் போது, ஒருவர் தேவனையும், அவர் நமக்காக செய்ய விரும்பும் காரியங்களையும் எப்படி நிராகரிக்க முடியும்? தேவன் நம்மிடம் கேட்பதெல்லாம் கீழ்ப்படிதலுடன் அவருடைய சித்தத்திற்கு நம்மை நாம் ஒப்புக்கொடுப்பதும், சாத்தானுக்காக நாம் வாழாமல் அவருக்காக நாம் வாழ்வதும் தான்.

# புதிய வெளியீடு




**550 தமிழ்ப் பாடல்கள்**
**50 ஆங்கிலப் பாடல்கள்**
**40 தமிழ், ஆங்கில**
**குறும்பாடல்கள்**

மிக நேர்த்தியாக அச்சிடப்பட்டு
தேர்ந்த முறையில்
பைண்டிங் செய்யப்பட்ட
பாட்டுப் புத்தகம் வேண்டுவோர்
எங்களை தொடர்பு கொள்ளவும்.

**World Evangelism Gospel Media**



## Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV

Every Monday 7:00-7:15 am and
Every Thursday 9:30-10:00 pm
Every Saturday 7:15-7:30 am

Contact : 98427 30382

## Arjunan in Tamil on Tamilan TV & Radio:

TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile: 9443558041)

## Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV:


TV:Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 a.m **on Rakshana TV:** (ANDRAPRADESH Contact Phone: 08842363722)

## P.R.Swamy & Douglas in Tamil on Radio:

Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNADAKA Contact Mobile: 09844 70763)

## P.K.Varghese in Malayalam on Hindi TV:

TV:Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. (KERALA Contact Mobile: 9447035465)




## Philemon & Kingsley in Tamil on Tamilan TV:


TV:Every Tuesday 9.30-9.45 p.m and Every Sunday 6.45-7.00 a.m. (TAMILNADU Contact Mobile: 9244214421)


## Sunny, Francis & Vinay David in Hindi on Hindi TV:


TV:Every Tuesday 7.00-7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile: 09810896789)


# எங்களது இதர வெளியீடுகள்












சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.